பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 07 வெள்ளிக்கிழமை (21-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் :48

## ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில்

# படையினர் தந்திரோபாயத்துடன் நடந்து புலிகளின் தாக்குதலை முறியடிக்கின்றனர்

### தென்பகுதிச் செய்தியாளர்களிடம் இராணுவத்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,ஜன.21

ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில் உள்ள முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் பீரங்கிகள், மோட்டார்கள் கொண்டு தாக்குதல்களை நடத்திவருகின்றபோதிலும் படையினர் தந்திரோபாயத்துடன் நடந்து தாக்குதலை முறியடித்துவருகின்றனர்.

மேற்கண்டவாறு வடக்கு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நிலைவரங்கள் தொடர்பாக நேரில் அறிவதற்காக வந்த தென்பகுதிச் செய்தியாளர்களிடமே அவர் இப்படிக் கூறினார்.

ஆனையிறவு, பரந்தன் ஆகிய பகுதிகள் தமது கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனையிறவு சென்று நிலைமையைப் பார்வையிட்ட தெற்கு செய்தியாளர்கள் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

ஆனையிறவு முகாமில் பதில் தாக்குதல்களை நடத்துவதற்குத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கட்டளைத் தளபதியாக சூல செனவிரத்ன நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.குடாநாட்டின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்டளைத் தளபதியாக பதவி வகித்த மேஜர் ஜெனரல் நிஹால் ஜெயக்கொடி நேற்று முன்தினம் மரணமானதையடுத்து அந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள சூல செனவிரத்ன நேற்றுப் பதவியேற்கவிருந்தார்.

1998ஆம் ஆண்டு குடாநாட்டில் 52ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாகவிருந்த இவர் பின்னர் லண்டனில் இலங்கைத் தூதரகத்தில் இராணுவ ஆலோசகராக குறுகியகாலம் பணியாற்றினார்.

அதன் பின்னர் மட்டக்களப்பில் கட்டளைத் தளபதியாக பணிபுரிந்த இவர் வவுனியா கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்கவிருந்தார்.

யாழ்.தளபதியின் மரணத்தை அடுத்து இவர் யாழ்.தளபதியாக பதவி ஏற்கவிருக்கிறார். (இ-3)

# அதிகாரப் பரவலாக்கல் குறித்து புலிகளுடனும் பேச அரசு முடிவு

## சகல தரப்புக்களின் இணக்கத்துடன் 3 மாதத்தில் பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜனவரி21

**அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டப் பிரேரணை குறித்து இறுதியாக விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்துவதென்று ஜனாதிபதி தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்தின இத்தகவலை வெளியிட்டார்.**

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம்பெறும் விசேட குழுவின் இந்தக் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுக்காலை அலரிமாளிகையில் நடைபெற்றது.

அதிகாரப்பரவலாக்கல், புதிய தேர்தல் முறை ஆகியன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு பிரேரணை ஒன்று அங்கு தயாரிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையை மூன்று மாத காலத்தில் அதாவது மார்ச் அல்லது ஏப்ரலில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதற்குமுன்பு நான்கு கட்டங்களாக இந்தப் பிரேரணை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நான்கு கட்டங்களும் வருமாறு:-

* முதல்கட்டம் - பொதுமக்கள் ஐக்கியமுன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சு நடத்துவது.
* இரண்டாம் கட்டம் - தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்துவது .
* மூன்றாம் கட்டம் - முக்கிய எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடன் இணக்கம் ஏற்பட பேச்சு நடத்துவது.
* நான்காம் கட்டம் -மூன்று கட்டங்களிலும் ஏற்பட்ட இணக்கப்பாடு

(12 ஆம் பக்கம் பார்க்க)



தேசிய அரசு, கட்சித் தாவல் சட்டத் திருத்தம் என்று வந்து இப்ப நான்கு கட்டப்பேச்சில் நிற்கினம்...!

## குடும்பஸ்தர் கைது

நெல்லியடி,ஜன.21

கரவெட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தரான வல்லிபுரம் பாலசிங்கம் (வயது 51) என்பவர் கடந்த 18ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது மனைவியால் ஈ.பி.டி.பி. அமைப்பின் பருத்தித்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரைக் கைது செய்தமைக்கான ரசீது படையினரால் வழங்கப்பட்டுள்ளது. (இ-3-109)

## யாழ்.மாவட்டத்தில் மேல்நீதிமன்றம் இயங்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ். மாவட்டத்தில் மேல்நீதிமன்றம் இயங்குவதற்கு பிரதம நீதியரசர் அனுமதி வழங்கியதுடன் அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.

நீதிமன்றத்துக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை அவர் ஒதுக்கியுள்ளார் என்றும் -

மேல்நீதிமன்றத்துக்கு நீதிபதி ஒருவரை நியமிக்கத் தேவையான ஏற்பாடுகளை அவர் செய்துள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் -

அந்த நீதிமன்றத்தை செயற்படுத்த இடம் ஒன்றைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (3)

## பவுஸர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சாரதி பலி!

### புனாணைப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு,ஜன.21

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த டீசல், மண்ணெண்ணெய் நிரப்பிய பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் இரு பவுஸர்கள் மீது நேற்றுக் காலை 8மணியளவில் புனாணையில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதில் அந்த பவுஸர் ஒன்றின் சாரதி கொல்லப்பட்டார்; மற்றும் இருவர் காயமடைந்தனர்.

புனாணை இராணுவ முகாமுக்கு சமீபமாக ரயில் நிலையப் பகுதியில் இந்த பவுஸர்களை இனந்தெரியாதோர் வழிமறித்ததாகவும் -

இராணுவத்தினர் போன்று சீருடை அணிந்து வந்த அவர்கள் பவுஸர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சிபெற்று வெளியேறிய பொலீஸார் மீது தாக்குதல்!

### மொறவேவவில் பொதுமக்கள் உட்பட ஐவர் பலி, 29 பேர் காயம்

திருகோணமலைஜன21

திருகோணமலை மொறவேவவில் உள்ள பொலீஸ் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சிபெற்று வெளியேறிய பொலீஸார் மீது நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒரு கான்ஸ்டபிள் மற்றும் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; 29 பேர் காயமடைந்தனர்.

பயிற்சியை முடித்துக்கொண்ட பொலீஸாருக்காக நேற்று அங்கு நடத்தப்பட்ட வைபவத்தில் அவர்களது உறவினர்களும் பங்குபற்றினர் என்றும் -

வைபவம் முடிந்தபின்னர் பயிற்சி பெற்றவர்களை உறவினர்கள் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர் என்றும்-

அச்சமயமே கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 18 பேர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் இதில் காயமடைந்த பதினொருபேர் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பயிற்சிக்கல்லூரி மீது விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்தியை பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்தன. (இ-3-7-150)

## 60 மீனவர் தடுத்து வைத்து விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

பருத்தித்துறைக் கடலில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கு மேலதிகமாக மீன்பிடித்த 60 மீனவர்கள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட அந்த மீனவர்களின் 'பாஸ்' படையினரால் மீளப்பெறப்பட்டது.

(இ-3-15)

## நாட்டைவிட்டு வெளியேறுமாறு வசந்தராஜாவுக்கு அச்சுறுத்து!

கொழும்பு, ஜன.21

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் வசந்தராஜா உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று பயங்கரவாதத்துக்கு' எதிரான அமைப்பு கேட்டுள்ளது.

அவ்வாறு வெளியேறாதபட்சத்தில் அவர் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் அந்த அமைப்பு எச்சரிக்கை செய்துள்ளது.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு லண்டன் சென்ற அவர் அங்கு விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தார் என்பதும் -

சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு வந்த அவர் தற்போது கல்கிசையில் வசித்து வருவதும் - தெரிந்தவையே. (இ-3)

## சிப்பாய் பலி

மட்டக்களப்பு,ஜன.21

மட்டக்களப்பு கிரானில் நேற்று முன்தினம் மாலை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## கல்முனையில் இராட்சத மீன்

கல்முனை கடற்கரையோரத்தில் 30அடி நீளமான இராட்சத மீன் ஒன்று நேற்றுக்காலை இறந்த நிலையில் கரைஒதுங்கியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கிலிருந்து தமிழர் கொழும்பு வருவதை கட்டுப்படுத்த நடவடிக்கை

### பாதுகாப்புப் பிரச்சினை காரணமாம்

கொழும்பு,ஜன.21

வடக்கு - கிழக்கில் இருந்து கொழும்புக்குத் தமிழ்மக்கள் வருவதைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு உயர்மட்டத்தில் ஆலோசனை செய்யப்படுவதாக பிரதிப் பொலீஸ் மா.அதிபர் டபிள்யூ. பி.பி. கொட்டகதெனிய தகவல் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்றை மேற்கோள்காட்டி சர்வதேச ஏஜென்சிகள் இதனை வெளியிட்டன.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் இருந்து கூடுதலானவர்கள் கொழும்பு வருவதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## முக்கிய அறிவித்தல்

முத்திப் பேறுபெற்ற யோசப்வாஸ் ஆலய கட்டட நிதிக்கான சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் மாசி மாதம் 16 ஆம் திகதி மாலை திருப்பலியின் பின்னர் இழுக்கப்படும். அதிர்ஷ்டசாலிகளின் இலக்கங்கள் 18 ஆம் திகதி உதயனில் வெளியாகும்.

(72913) பரிபாலகர்.

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமத்தம்பி தவக்குமார்

(பெயின்ரர் குமார்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி தவக்குமார் அவர்கள் 30-12-99 அன்று டோகாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் கனகமணி தம்பதிகளின் அன்பு மகனும் வசந்தியின் அன்புக் கணவரும் சுஜானாவின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி (மட்டுவில்), அற்புதராஜா (ஜேர்மனி), ஜெயானந்தன் (ஜேர்மனி). பாலன் (ஜேர்மனி), தேவன் (மட்டுவில்), ஜெயராணி (இளவாலை) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் நாளை அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கனகமணி (தாயார்)
தேவன் (தம்பி)
(தேவன் கராஜ், சாவகச்சேரி)

சிவன்கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(72911)

## க. பெ. மயில்வாகனம் (பண்டிதர்)

மீசாலை கிழக்கைச் சேர்ந்த பண்டிதர் க. பெ. மயில்வாகனம் 19 - 01 - 2000 அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற கந்தர் பெரியதம்பியின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புமிகு கணவரும், பெ. மார்க்கண்டு (இளைப்பாறிய அதிபர்), பெ. சதாசிவம் (ஓய்வு பெற்ற நகர சபை மேற்பார்வையாளர்), காலஞ்சென்ற திருமதி இ. தங்கம்மா, செல்வி பெ.கற்பகம், திருமதி ந. காசிப்பிள்ளை, மா. கௌரிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை), ச. பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்னரும் மற்றும் பாக்கியலீலா (கனடா), சந்திரலீலா (கனடா), சோதிமலர், யோகேஸ்வரன் (கனடா), லோகேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), பாலசச்சிதானந்தஈஸ்வரன் (ரவி சாவகச்சேரி ப.நோ. கூ. ச. வங்கி முகாமையாளர்), ராதை, சுகுமாரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை (ஆசிரியர்), முத்துக்குமாரு (கனடா), வைரவநாதன் (தாதிய உத்தியோகத்தர் -யாழ். போதனாவைத்தியசாலை, கணேசமூர்த்தி (வருமான மேற்பார்வையாளர் (R. O. நகரசபை சாவகச்சேரி), திரவியவதனி (கனடா), சாந்தி (கனடா), கோமதி (கனடா), அனந்தறாகினி, விஜயந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரதுஇறுதிக்கிரியைகள்இன்று(21.01.2000) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ரவி
(மகன்)

பூம்புகார்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(சி/10726)

## திருமதி கமலாம்பிகை பாலச்சந்திரன்

துன்னாலை மேற்கு பள்ளந்தோட்டம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல. 8, 11 ஆம் ஒழுங்கை கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பாலச்சந்திரன் அவர்கள் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற A. K. முருகேசு ஆசிரியர் — திருமதி மு. செல்லாச்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வ. சூரியப்பிள்ளைத் தம்பதிகளின் அருமை மருமகளும், திரு. சூ. பாலச்சந்திரன் (கணக்காளர், துறைமுக அதிகாரசபை) அவர்களது அன்பு மனைவியும் திருமதி க. செல்வராநியின் அன்புத்தாயாரும் க. கணேசதாசன் [U. K.] அவர்களின் மாமியாரும் க. உமேஷின் பேரனும் (மாணவன் கொழும்பு றோயல் கல்லூரி) மு. சிறீஸ்கந்தராசா (அதிபர், யா/அம்பன் அ. மி. த. க. பா.) வின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரது பூதவுடல் அஞ்சலிக்காக A. F. றேமண்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு தகனக் கிரியைகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்
மு. சிறீஸ்கந்தராசா
(சகோதரர்)
U. K. கொம்னிக்கேசன்,
070 — 212804
070 — 212868
கலிகை, கரவெட்டி.

இல. 8, 11 ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 3
T.P. No. 576228

(சி/10732)

## தைப்பூச விழா

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி இந்துமா மன்றமும், கவின்கலை மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தைப்பூச பொங்கல் விழா அதிபர் என். வன்னியசிங்கம் தலைமையில் இன்று நடைபெறவுள்ளன.

## திருக்குறள் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 21

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 6 முதல் 12 வரையான மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மனன, எழுத்துப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய மட்டத்தில் நடைபெறும் இப்போட்டியில் கூடிய திருக்குறள்களை மனனம் செய்து, எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்து அதிக புள்ளிகளைப் பெறும் மாணவருக்கு பரிசாக 'தங்கப் பதக்கம்' வழங்கப்படவுள்ளது. (ஐ)


புலமைப் பரிசில்-2000

23 வது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்

சே. மதுரிகா
யா. இ. ம. ஆ. பா.
த. திவாகர்
யா. பரியோவான் கல்.
யோ. ரஜீவன்
யா. இ. ஆ. பா.
த. தர்மிகா
யா. ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்.
த. சுவாஸ்கர்
யா. கொ. இ. ஆ. பா.
ம. ரம்யா
யா. இ. ஆ. பா.
ர. ஷாமளா
யா. இ. ம. ஆ. பா.
கு. யோகானந்தி
யா. ஆ. மெ. மி. பா.
ந. பிரிகஷ்வினி
யா. இ. ஆ. பா.
சி. வித்தியாசாகர்
யா. உரும்பராய் சை. த. வி.

★ தரம் 2 முதல் 6 வரை மாதாந்த பயிற்சி வினாக்களும் பெறலாம்.

அடுத்த பரீட்சை:- 23 - 01 - 2000

BOND யாழ். நகர்
(72910)

நாகராஸ்
சுன்னாகம்
சரத்குமார் தேவயானியின்
சூரியவம்சம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72846]

ராஜா
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
அவள் வருவாளா
10.30, 2.30
[சி/10649]

லிபேட்டி அச்சுவேலி
கார்த்திக், ராதா நடித்த
அலைகள் ஓய்வதில்லை
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678
[72730]


## சுகாதார கருத்தரங்கு நடைபெறாது

யாழ்ப்பாணம், ஜன. 21

கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட 14 பாடசாலைகளில் தரம் 1, 4, 7 ஆகியவற்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை சனிக்கிழமை நடைபெற இருந்த சுகாதாரக் கருத்தரங்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ஐ-6)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம்

(கிளாக்கர், இளவாலை)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வதிவிடமாகவும் சுண்டுக்குளியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் அவர்கள் 20-01-2000 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகிப்பிள்ளையின் அன்புக் கணவரும் புஷ்பராணி, விசுவநாதமுதலியார் (H. N. B.), முருகதாஸன் (நீர்ப்பாசனத் திணைக்களம்), காலஞ்சென்ற உமாராணி, சிறீதரன் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவராசரத்தினம் (ஓய்வுபெற்ற கல்வியதிகாரி), தவமணிதேவி, விஜயலட்சுமி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), Dr. குகப்பிரியை (நியூசிலாந்து) ஆகியோரின் ஆசைமிகு மாமனாரும் Dr. மோகன், Dr. சௌமினி (U. K.), சுரேஷ் (பொறியியலாளர்), ரகுவதனா (சிங்கப்பூர்), குகநாதன் (H. N. B.), தாரணி (H. N. B), மயூராஜ் (பரியோவான் கல்லூரி, 2000 A/L), நிருபா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, Yr. 11), லோகிதா, சஜீவ் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ரிஷியின் அன்புப் பூட்டனாரும் சரஸ்வதி (இளவாலை), வல்லித்தம்பி, செல்லத்துரை (புன்னாலைக்கட்டுவன்), ஆறுமுகம் (நியூசிலாந்து), செல்வநாயகி (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21-1-2000) வெள்ளிக்கிழமை பி. ப. 12-30 மணிக்கு சுண்டுக்குளி வதிவிடத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K. V. முதலியார் (மகன்)
K. முருகதாஸன் (மகன்)

11, சுவாட்ஸ் லேன்,
சுண்டுக்குளி.

(72919)

## சண்முகநாதன் இலங்காதேவி

(லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

திருநெல்வேலியைச் சேர்ந்த சண்முகநாதன் இலங்காதேவி அவர்கள் 20-01-2000 நேற்றுக் காலமானார்.

அன்னார் திரு. திருமதி J. M. பொன்னையாவின் அன்பு மகளும் அப்பாத்துரை சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் P.S. திருச்செல்வம் (கனடா), காலஞ்சென்ற முன்னாள் அதிபர், P.X.S. குலசிங்கம், திருமதி எம். தவமணி (கொழும்பு), திருமதி A. F. பூமணி (கொழும்பு), திருமதி G செல்வமணி (முல்லைத்தீவு), S. யோகமணி (பிரான்ஸ்), திருமதி J. பவளமணி (பிரதம. லிகிதர், நல்லூர் M. P. C. S.), J. N. P. பாக்கியராஜா (கிராம சேவகர்-கோட்டை), P. ருக்மணி (அதிபர், செல்வதி பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-1-2000) வெள்ளிக்கிழமை 3.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
திரு. அ. சண்முகநாதன்
(கணவர் - அரியாலை)
திரு. J.M.P பாக்கியராஜா
(கிராம சேவகர் கோட்டை - J/81)

இல. 07, கலாசாலை வீதி.
திருநெல்வேலி,

(72918)

## பொன்னையா நடராசா

பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கெருடாவில் தொண்டமானாறை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா—நடராசா 20-01-2000 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வ. சி. பொன்னையா - கோவிந்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோதிமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இரத்தினம், குமாரசாமி மற்றும் யோகலிங்கம் (பொற்பதி வீதி கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபுத்திரன், விமலாதேவி, இராமலிங்கம் (சுவிஸ்) சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சிவசோதி, விக்னராஜா (கனடா) ஆனந்தலிங்கம் (கனடா) பாலகௌரி (கொழும்பு) ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(21-1.2000) வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிக்கு நடைபெற்று கெருடாவில் காட்டுப்புலம் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. யோகலிங்கம்
(சகோதரன்)
சிவபுத்திரன் [மகன்]

கெருடாவில்,
தொண்டமானாறு.

(72915)

# கைதிகளைக் கொன்ற காவலர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்குக!

## ஜனாதிபதிக்கு 'ரெலோ' பக்ஸ் செய்தி

யாழ்ப்பாணம், ஜன. 21

களுத்துறைச் சிறையில் சிறைக்காவலர்களால் கொல்லப்பட்ட இரு தமிழ்க் கைதிகளின் [illegible] குடும்பங்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும். அத்துடன் படுகொலைக்குக் காரணமான சிறைக் காவலர்களை சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள 'பக்ஸ்' செய்தி ஒன்றிலேயே மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

அந்தப் பக்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு:

★ குடாநாட்டில் சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்படுவோர் கொழும்புக்கு கொண்டு செல்லப் படுவதால் அவர்களை அங்கு சென்று பார்வையிடுவதற்கும் வெளியில் எடுப்பதற்கும் பெற்றோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகளை யாழ்ப்பாணத்தில் உள்ள சிறைகளுக்குஇடம்மாற்றிஇங்கேயே வழக்குகளை விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ குடாநாட்டில் கரையோரப் பகுதிகளில் கடற்றொழில் செய்வதற்கு கடற்படையினரும் இராணுவத்தினரும் தடை விதித்துள்ளனர். அத்துடன் கடலில் போடப்பட்ட வலைகளைக் கூட மீள எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. வாழ்வின் அன்றாட சீவியத்துக்காக கடற்றொழிலையே நம்பி இருக்கும் இந்த மீனவர்களின் ஜீவாதார கோரிக்கைகளைஏற்றுஉரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பகுதியில் படை நடவடிக்கைகளால் பெருந்தொகையான விவசாயிகள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் உள்ளனர். இந்த முகாம்களில் போதியளவு உணவு, குடிதண்ணீர், மருத்துவம், இடவசதி இல்லாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளிலும் குடியிருப்புக்களிலும் மக்களை மீளக் குடியமர்த்தி அவர்கள் விவசாயச் செய்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் கடனுதவி செய்து உதவ வேண்டும். (ஐ-4)

# கைத்தொழில் அதிகார சபை கணனிப் பயிற்சிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 21

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் யாழ்ப்பாணத்தில் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென பத்து கணனிகள் சபையின் யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண முகாமையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கணனிப்பயிற்சி நெறிக்கு முதற் கட்டமாக 20 பேர் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடம் பயிற்சிகள் வழங்கப்படும் என்று சபையின் மாகாண முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்கள் சபையினால் கோரப்பட்டுள்ளன.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்குவிண்ணப்பிக்கலாம்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை போன்றவற்றை உள்ளடக்கிய சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை ஸ்ரீ ஜயவர்த்தனபுர தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு சபையின் தலைவரின் பெயருக்கு பெறப்பட்ட நூறு ரூபா பெறுமதியான காசுக் கட்டளையுடன் மார்ச் முதலாம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

'மாகாண முகாமையாளர் தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை இல. 7, கோயில் வீதி யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

16வயதுக்கும்25வயதுக்கும் உட்பட்டவர்களே இந்தப் பயிற்சிகளில் பங்குபற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# சித்த ஆஸ்பத்திரிகளுக்கு தளபாடங்கள் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 21

குடாநாட்டிலுள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கென வடக்கு — கிழக்கு மாகாண சித்த ஆயுர்வேதப் பணிப்பாளரினால் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து மாநகர மற்றும் உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் சித்த வைத்திய சாலைகளுக்குத் தேவையான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சித்த வைத்திய அதிகாரி வி. வேதநாதன் தெரிவித்தார்.

தளபாட உற்பத்தி வேலைகள் யாழ். மாநகரசபை வேலைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# கைதடி கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு அனுமதி

கைதடி, நாவற்குழி பகுதிகளைச் சேர்ந்த 15 கடற்றொழிலாளர் குடும்பங்கள் தொழில் நிமித்தம் வேலணைப் பகுதியில் குடியமர கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கைதடி, நாவற்குழி பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தற்போது தொழில் வாய்ப்பினை இழந்துள்ள நிலையில் வேலணை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை கைதடி நாவற்குழி சங்கத்தினர் வேலணைச்சங்கத்திடம் கோரியிருந்ததாகவும்—

வேலணை கடற்றொழில் சங்கம் அதற்கு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மேற்படி 15 குடும்பங்களும் அங்கு சென்று தொழில் மேற்கொள்ள கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகவும்— கைதடி நாவற்குழி கடற்றொழில் சங்கப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-9)

# மின் விநியோகத்தை சீராக்குமாறு அனுருத்த ரத்வத்தவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம். ஜன. 21

யாழ். குடாநாட்டில் சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. இருதயராஜா மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாடு அரச படைகளால் கைப்பற்றப்பட்ட பின்பு அரசசிவில் நிர்வாகம் ஓரளவு சிறப்பாக செயற்பட்டுவரும் போதும், மக்களது அடிப்படைப் பிரச்சினைகள் மிகக் குறைந்த அளவிலேயே தீர்க்கப்பட்டுள்ளன.

குறிப்பாகத் தங்கள் அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் மின்சாரத்துறையின் யாழ். அலுவலகம் குடாநாட்டுக்கான மின்சார வழங்கலைப் புனரமைப்பதில் பெரும்பங்கு வகித்த போதிலும் —

தற்போது மின்சாரம் வழங்கும் இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் குடாநாட்டுக்கான மின்வழங்கல் சீராக இல்லாததைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள்.

இதனால் மாணவர்கள், தொழிநுட்பத்துறையில் ஈடுபடுவோர் பலரும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதால் இதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் துரிதகதியில் தீர்வுகாணும் நடவடிக்கையை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன் — என்றுள்ளது. (இ-8)

## இலவச சிகிச்சை முகாம்

நவாலி, ஜன. 21

நவாலி ஊன்றுகோல் பணியகம் இலவச மருத்துவ சிகிச்சை முகாமொன்றினை கடந்த வாரம் நவாலி சென் பீற்றேர்ஸ் றோ. க. த. க பாடசாலை மண்டபத்தில் நடத்தியது.

மானிப்பாய் அரசினர்வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் க. அருமைத்துரை இதில் கலந்து கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தார். நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற்றுச்சென்றனர். (ஐ-100)

## நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு

கிராமசேவையாளர் ஒருவரது வீட்டில் நள்ளிரவு வேளையில் நீரிறைக்கும் இயந்திரம், இரு சைக்கிள்கள் என்பன இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

மந்திகையில் வசிக்கும் மு. நந்தகுமார் என்ற கிராம சேவையாளர் வீட்டுக்குள் நள்ளிரவு வேளை உட்புகுந்த திருடர்கள் வீட்டு முற்றத்தில் இருந்த றொபின் நீரிறைக்கும் இயந்திரத்தையும், லேடீஸ் சைக்கிள் உட்பட இரு சைக்கிள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ஐ-173)

# கூட்டுறவுக் கிராமிய வங்கிப் பிரிவு திறப்பு

சுன்னாகம்பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கிப்பிரிவு ஒன்று இன்று முதற்கட்டமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கிராமிய வங்கிப் பிரிவை இன்று வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

இதேவேளை —

கோண்டாவில், மானிப்பாய் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களிலும் கூட்டுறவுக் கிராமிய வங்கிப்பிரிவுகளை ஆரம்பித்து வைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

# நாவற்குழி களஞ்சியப்பொருள்; குறைப்பது பற்றி ஆலோசனை

நாவற்குழிப் பகுதியில்நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலுள்ள உணவுப பொருள்களைக் குறைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்திருந்த இந்த உணவுக் களஞ்சியம் 46 லட்சத்து 25 ஆயிரத்து 440 ரூபா செலவில் வடக்கின் மீள்குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபையினால் அண்மையில் புனரமைக்கப்பட்டது.

இந்தக் களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருள்களைக் குறைப்பது குறித்து ஆலோசிக்கப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவிக்கப்படும் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்கான வேறு கட்டடங்களை வாடகைக்குப் பெறுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 5)

## கால்நடைகளை

# கிராம அலுவலர் சிபார்சுடனேயே இறைச்சிக்காக வெட்ட முடியும்

யாழ்ப்பாணம், ஜன. 21

இறைச்சிக்காக ஆடு, மாடுகளை வெட்ட கொல்களத்துக்குக் கொண்டுவரும்போது அத்தகைய கால்நடைகள் தொடர்பாகக் கிராம அலுவலர்களால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தையும் இனிமேல் சமர்ப்பிக்கவேண்டும்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி இவ்வாறு இறைச்சி விற்பனையாளர்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அண்மைக் காலமாகச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறைகளில் களவாடப்பட்ட, நோய்வாய்ப்பட்ட, காயப்பட்ட மனித பாவனைக்கு ஒவ்வாத கால்நடைகளின் இறைச்சி விற்பனை எம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எமது பகுதியினால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்குத் தகுந்த விளக்கம் கொடுத்து ஒழுங்கு நடைமுறைகளைப் பாவனையாளர்களின் நன்மை கருதிப் பின்பற்றுமாறு வேண்டப்பட்டனர்.

அத்துடன் வெள்ளிக்கிழமை, பௌர்ணமி தினம், மாட்டுப் பொங்கல் தினங்களில் பெரும்பான்மையான மக்களின் மனத்தைப் புண்படுத்தும் வகையில் கால்நடைகளைக் களவாக வெட்டுவதைத் தவிர்க்குமாறு வேண்டியிருந்தோம். இதற்கு மாறாக மாட்டுப் பொங்கல் தினத்தன்று கால்நடைகள் வெட்டப்பட்டு விநியோகிக்கப்படும்பொழுது எமது ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன் கால்நடைகளின் களவுகள் அதிகரித்து வரும் முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. அதனைத் தவிர்க்கும் முகமாகக் கொல்களத்தில் வெட்டுவதற்காகக் கொண்டுவரும் கால்நடைகளை விற்றவர், வாங்கியவர் சம்பந்தமான தகவல்கள் அப்பகுதிக் கிராமசேவை உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம இருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறையினால் கால்நடைகள் களவாடப்படுகின்றதை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

பொதுமக்கள் அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் மாத்திரம் — மாநகரசபை உத்தியோகத்தரின் முத்திரை பதிக்கப்பட்ட — இறைச்சியை வாங்கி எமது பணிக்கு உதவுவதுடன், நோய்வராது தம்மையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதையும் மீண்டும் வலியுறுத்துகின்றேன் — என்று அதில் உள்ளது. (ஐ-7)

# இடம் மாற்றும் திட்டத்துக்கு கைதிகள் கடும் எதிர்ப்பு!

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைப் பூஸா, வெலிக்கடை ஆகிய சிறைகளுக்கு மாற்றஎடுக்கும் முயற்சிக்கு சிறைக் கைதிகள் கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

தமது ஆட்சேபனையை சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் கைதிகள் கடந்த செவ்வாயன்று கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையிலேயே தங்களைத் தொடர்ந்து தங்கவைக்குமாறும்—

தமக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் —

அவர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை—

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் ஓரிரு தினங்களில் களுத்துறைச் சிறைக்குச் செல்லவிருக்கின்றனர்.

## சான்றிதழ்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 21

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1991-ம்ஆண்டின் இறுதிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான 324 சான்றிதழ்கள் பரீட்சை ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் இவற்றை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

# புலிகளின் பிரதேசத்தில் மீண்டும் "பாஸ்" வழங்கல்

வவுனியா, ஜன. 21

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கு பொது மக்களுக்கு "பாஸ்" வழங்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக விடுதலைப் புலிகளால் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தப் பணியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக அப்பிரதேசத்தில் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

ஒரு குடும்பத்தில் 40 வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கு பிணை எதுவும் இன்றி 'பாஸ்' வழங்கப்படுவதாகவும்—

வயதுக்கட்டுப்பாடு உள்ளவர்களுக்கு பிணையுடன் 'பாஸ்' வழங்கப்படுவதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

'பாஸ்' பெற்ற சுமார் 2 ஆயிரம் பேர் கடந்த செவ்வாய் தம்பனைப் பாதையூடாக பிரமணாளங்குளம் தடை முகாமுக்கு வந்தனர் என்றும்—

அவர்களில் 500 பேர் மட்டுமே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டனர் என்றும்—

ஏனையோர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும்—கூறப்பட்டது. (உ-3-164)

---

## கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்
## லங்கா சிமெந்து நிறுவனக்கிளை - காங்கேசன்துறை
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்:- தற்காலிக காரியாலயம் - (L-C-L) இணுவில்

காலம்:- 23-01-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

—செயலாளர்

(72878)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுள்ள எமது சங்கப் பணியாளர்

### திரு. இ. விஜயமோகனராஜா

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன் கூட்டுறவுத் துறையில் அவர் சேவை மேன் மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பனை தென்னை வள அபி.
கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

(72848)

---

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 24 — 07 — 1934



உதிர்வு: 24 — 01 — 1997

### திருமதி பூமணி நடேசன்

(B. A. Dip. in Edu.)

( ஓய்வு பெற்ற ஆசிரியை )

திதி: 21 – 01 – 2000

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(72621)

---

# கடற்றொழில் உபகரணங்களை எடுத்துவர பாதுகாப்புத்தரப்பு அனுமதி

## நீண்ட காலமாக கொழும்பில் முடங்கிக் கிடந்தவை

யாழ்ப்பாணம், ஜன. 21

நீண்ட காலமாக கொழும்பில் முடங்கிக்கிடந்த வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்துக்கான கடற்றொழில் உபகரணங்களை இங்கு எடுத்து வருவதற்கு தற்போது பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

30 லட்சம் ரூபா செலவில் இந்தக் கடற்றொழில் உபகரணங்கள் சமாசத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன என்றும் —

கடந்த 8 மாதங்களாக இவை பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக கொழும்பில் தவம் கிடந்ததாகவும்—

எனினும் கடந்த வாரமே அவற்றை இங்கு எடுத்து வருவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தமக்கு வழங்கப்பட்டதாகவும் — சமாசத்தலைவர் ரீ. தவரட்ணம் தெரிவித்தார். (இ-9)

---

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## 2000 ஆண்டுப் பொதுக்கூட்டமும நிர்வாகசபைத் தெரிவும்

காலம்:- 23 - 02 - 2000 புதன்கிழமை

நேரம்:- பிற்பகல் 2.00 மணி (இலங்கை நேரம்)

இடம்:- வணிகர் கழகப் பணிமனை

அன்பான வேண்டுகோள்!

1) ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 10-02-2000 திகதிக்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.
2) அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும், தெரிவில் இடம்பெறவும் அனுமதிக்கப்படுவார்கள்.
3) நிகழ்ச்சி நிரல் சகல அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல. 27, நவீன சந்தை (மேல் மாடி),
யாழ்ப்பாணம். (சி/10721)

---

## நயினையில் மகா யாகம்

யாழ்ப்பாணம், ஜன. 21

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மகா யாகம் இடம்பெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கிரியைகள் யாவும் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இன்றைய தினம் நடைபெறும் மகாயாக நிகழ்வுக்கு வருகை தரும் அடியவர்களின் நன்மை கருதி போக்குவரத்து வசதிகளும் அன்னதான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தேவஸ்தான அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (உ-7)

## தியாகராஜர் ஆராதனை விழா

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். பாரதி கான சபா நடத்தும் ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் அரசடி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

இணுவில் தர்மஸாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் ஆசியுரை வழங்குவர். கலாபூஷணம் இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் வழங்கும் 'கீர்த்தனாஞ்சலி' சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும். (உ-7)

## தற்கொலையாளி அவர் அல்லர்

கொழும்பு, ஜன. 21

கொழும்பில் அண்மையில் பிரதமர் அலுவலகம் முன்பாகத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்பட்டு வந்த யுவதி யசோதா திலகரத்ன என்பவர் அல்லர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட அடையாள அட்டையில் மேற்படி பெயர் விவரம் காணப்பட்டதை அடுத்து மட்டக்களப்பில் உள்ள அந்த யுவதியின் பெற்றோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தற்கொலையாளியான அந்த யுவதியின் இரத்தமும் பெற்றோரின் இரத்தமும் மரபணுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது பிரஸ்தாப தற்கொலையாளி அவர்களது மகளான யசோதா திலகரத்ன அல்லர் என்பது தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யசோதா திலகரத்ன என்பவர் தற்கொலைத்தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக இன்னமும் கொழும்பில் நடமாடி வருவதாகப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ஐ-க-3)

---

## வலிகாமம் வடிசாலை சாராயம் விலை அதிகரிப்பு

வலிகாமம் வடிசாலை (நவாலி) யில் உற்பத்தி செய்யப்படும் சாராயங்களின் சில்லறை விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

விகர் சாராயம் 33.5% (750 மி.லீ.) - 210/-

பனை விசேட சாராயம் 34.5% (750 மி.லீ.) 215/-

இவற்றை உத்தரவு பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

– பொதுமுகாமையாளர்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய் (வ. து.)
யா/மா/ J.P. 2154 - 06 - 11. 1993

(சி/10715)

---

வடபிராந்திய
## முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க
## அறிவித்தல்
### வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

ஆட்டோ உரிமையாளர், சாரதிகளுக்கு.

வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி (ஆட்டோ) சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர் வரும் 23 – 1 – 2000 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் திரு. வீ. ராஜ்குமார் அவர்கள் தலைமையில் செம்மாதெருவில் அமைந்துள்ள யாழ்.-சிற்றிஹோல்மண்டபத்தில்நடைபெறவுள்ளதால் யாழ். குடாநாட்டில்வாடகைச்சேவையில்சகல ஆட்டோ உரிமையாளர், சாரதிகளும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறும் சங்கப் பதிவு மேற்கொண்டு வாடகைச்சேவையில் ஈடுபட வேண்டிய அவசியத்தையும் இத்தால் வலியுறுத்துகின்றோம்.

நன்றி

– நிர்வாகம்

வட பிராந்திய முச்சக்கர மோட்டார்
ஊர்திச் சேவை சங்கம்,
முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். (சி/10707)

# இஸ்ரேல் - சிரியா பேச்சு முறிவடையும் நிலையில்!

ஜெருசலேம், ஜன. 21

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையில் நான்கு ஆண்டுகளின் பின்னர் ஆரம்பமான சமாதானப் பேச்சுக்கள் முறிவடையும் நிலை தோன்றி உள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் நேற்று முன்தினம் அமெரிக்காவில் ஆரம்பமாக இருந்தன. எனினும் அது திடீரெனப் பிற்போடப்பட்டது.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள — சிரியாவுக்குச் சொந்தமான — கோலான் குன்றுப் பகுதியை ஒப்படைப்பதற்கான உறுதிமொழியை வழங்க வேண்டும் என்று சிரியா தெரிவித்திருந்தது. ஆனால் சிரியாவின் இந்தக்கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்து விட்டதாக ஜெருசலேம் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுக்களுக்கான எந்தவித முன் நிபந்தனைகளையும் இஸ்ரேல் ஏற்காது என்று இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் கூறியதாக அவரது நெருங்கிய உதவியாளர் ஒருவரை மேற்கோள்காட்டி இஸ்ரேல் வானொலி அறிவித்தது.

அதேசமயம் —

பிற்போடப்பட்ட இஸ்ரேல் — சிரியப் பேச்சுக்கள் விரைவிலேயே மீண்டும் ஆரம்பமாகும் என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் நம்பிக்கை வெளியிட்டார்.

(ஐ-6)

## பாக். தூதரக அதிகாரியை இந்தியா வெளியேற்றியது

புதுடில்லி, ஜன. 21

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியா உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் இருந்து இந்தியத் தூதரக அதிகாரி பி. மோஸஸை பாகிஸ்தான் வெளியேற்றியதற்குப் பதிலடியாக இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்ட பாகிஸ்தான் தூதரக துணைத் தூதரிடம் ஷகிப் ஹுசைன் என்ற தூதரக அதிகாரியை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை —

இந்தியத் தூதரக அதிகாரி பி. மோஸஸ் மீது பாகிஸ்தான் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களையும் இந்தியா மறுத்துள்ளது. (ஐ-6-7)

## பயங்கரவாதத்துக்கு எதிராக

# இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்பட முடிவு

லண்டன், ஜன. 21

உலகில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்காக கூட்டாக இணைந்து செயற்பட இந்தியாவும் அமெரிக்காவும் இணங்கி உள்ளன.

இரு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டத்தில் கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் லண்டனில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து வெளியிட்ட கூட்டு அறிக்கை ஒன்றில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் மற்றும் அமெரிக்க வெளிவிவகாரத்துறை இணை அமைச்சர் ஸ்ரோன் அல்பேட் ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கென இரு நாடுகளும் குழுக்களை அமைக்க உள்ளன. இந்தக் குழுக்கள் அடுத்த மாதம் பேச்சுக்களை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச பயங்கரவாதத்தை கூட்டாக இணைந்து முறியடிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய விமானத்தைக் கடத்தியவர்களை விசாரணை செய்து தண்டனை வழங்குவதில் இருநாடுகளும் இணைந்து செயற்படுவதற்கும் இந்தப் பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் இந்திய விஜயம் குறித்தும் விரிவாக இரு அமைச்சர்களும் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-7)

## அமெரிக்காவுக்குப் பின்னடைவு:

# ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணையின் பரிசோதனை முயற்சி தோல்வி

நியூயோர்க், ஜன. 21

அமெரிக்காவினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஏவுகணை எதிர்ப்பு பலஸ்டிக் ஏவுகணைகளை உருவாக்கும் முயற்சி தோல்வி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பசுபிக் சமுத்திரத்தில் நடத்தப்பட்ட இந்த பலஸ்டிக் ஏவுகணைப் பரிசோதனைவெற்றியளிக்கவில்லை என்று அமெரிக்கஇராணுவத்தலைமையகமான பென்ரகன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த ஏவுகணையின் மாதிரி வடிவம் ஒன்று நேற்று முன்தினம் தென் பசுபிக் பகுதியில் உள்ள ஏவுகணைச் சோதனைத் தளம் ஒன்றில் இருந்து ஏவப்பட்டது. ஆனால் அது தனது இலக்கைத் தாக்கித் தகர்க்கத் தவறிவிட்டது. ஆயிரத்து 800 கோடி டொலர் பெறுதியான இந்த பலஸ்டிக் ஏவுகணைத் திட்டத்துக்கு அனுமதி அளிப்பதா இல்லையா என்பதை ஜனாதிபதி கிளின்ரன் இந்த ஆண்டு இறுதியில் முடிவு செய்ய உள்ளார்

இந்த நிலையில் சோதனை முயற்சி தோல்வி அடைந்திருப்பது பலஸ்டிக் ஏவுகணைத் திட்டத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் மேற்படி ஏவுகணைத் திட்டத்தை சீனா, ரஷ்யா உட்பட பல நாடுகள் மிகக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளன. இது உலகளாவிய ஏவுகணை ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் அவை தெரிவித்துள்ளன. (ஐ-6-7)

## றொபின் குக் மத்திய கிழக்குக்கு விஜயம்

லண்டன், ஜன. 21

பலஸ்தீனர்களுக்கு அளிக்கும் ஆதரவு தொடர்பாக விளக்குவதற்காக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் றொபின் குக் அரபு நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஜோர்டான்,' எகிப்து, பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் அவர் தமது நாட்டின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவார் என்று பிரிட்டிஷ் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-ச-3)

## பெங்களூரில் சம்பவம்

# சினிமாப் படப்பிடிப்பின் போது குண்டு வெடித்து மூவர் பலி!

புதுடில்லி, ஜன. 21

இந்தியாவின் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரில் திரைப்படப்பிடிப்பு (சூட்டிங்) நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நடிகர்கள் மூவர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்று தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்பு இடம்பெற்றபோது மாநில அமைச்சரும் நடிகருமான பங்கரப்பா அங்கு தங்கி இருந்தார். எனினும் அவருக்கு அதிர்ஷ்டவசமாக காயம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-6-7]

## இந்தியா விமானக் கடத்தல்

# சர்வதேச சிவில் விமான அமைப்பிடம் முறைப்பாடு

கடந்த மாதம் காத்மண்டுவில் இருந்து புறப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது தொடர்பான விடயத்தில் தலையிடுமாறு சர்வதேச சிவில் விமான அமைப்பிடம் இந்தியா கேட்டுள்ளது.

இந்தக் கடத்தல் தொடர்பாக உத்தியோகபூர்வமான முறைப்பாட்டை இந்தியா நேற்று முன்தினம் அந்த அமைப்பிடம் சமர்ப்பித்தது.

விமானத்தைக் கடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ளனர் என்றும் — அவர்களை விசாரணைகளுக்காக இந்தியாவுக்கு அனுப்புவதற்கு பாகிஸ்தான் கடமைப்பட்டுள்ளது என்றும் —

சர்வதேச சிவில் விமான அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியப் பிரதிநிதி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளுக்காக கடத்தல் காரர்களைக் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க அந்த அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்தியா கோரி உள்ளது. [ஐ 6-7]

## குற்றச்சாட்டுக்கள் முறைப்படி தாக்கல்

# ஷெரிப் மீதான விசாரணை அடுத்தவாரம் தொடங்கும்

இஸ்லாமாபாத், ஜன. 21

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ்ஷெரிப் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் அடுத்த வாரம் முறைப்படி ஆரம்பிக்கும் என்று இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

நவாஸ்ஷெரிப் மீதும் அவரது தம்பி உட்பட மேலும் 6 பேர் மீதும் கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் தேசத்துரோகம், விமானக் கடத்தல் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முறைப்படி தாக்கல் செய்யப்பட்டன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக அரங்கில்

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்காக நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட நவாஸ் ஷெரிப்பும் அவரது சகாக்களும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்தனர்.

'நான் விமானத்தைக் கடத்தவில்லை. ஜெனரல் முஷாரப் தான் நாட்டின் ஜனநாயகத்தையும், ஆட்சியையும் கடத்தி விட்டார்'' என்று நவாஸ் ஷெரிப் நீதிமன்றில் தெரிவித்தார்.

நவாஸ்ஷெரிப் மீதும் அவரது சகாக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் ஒன்று நிரூபிக்கப்பட்டாலும் அவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-6-7)

## இந்தோனேசிய மாகாணத்தில்

# கிறிஸ்தவ - முஸ்லிம் கலவரங்கள் நீடிப்பு

ஜகார்த்தா, ஜன. 21

இந்தோனேசியாவின் மொலுக்காஸ் தீவுகளில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான வன்முறைகள் தொடர்வதனால் அங்கு தொடர்ந்தும் பெரும் பதற்றம் நிலவி வருகின்றது.

வன்முறையாளர்களைக் கண்ட இடத்தில் சுடும்படி அரசுஇராணுவத்துக்குஉத்தரவிட்டுள்ளது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இராணுவமும் பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவர்களுக்கு சொந்தமான கடைகள் மற்றும் தேவாலயங்களை முஸ்லிம் கலகக்காரர்கள் தாக்கிச் சேதப்படுத்தி வருகின்றனர். அத்துடன் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் வீடுவீடாகச் சென்றும் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை இடம்பெற்ற வன்முறைகளில் 3 பேர் உயிரிழந்ததாக அரசு அறிவிகதுள்ளது. எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகம் என்று செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. (ஐ-6-7)

## நெடுஞ்செழியனின் மறைவை ஒட்டிய

# அ.தி.மு.க. அஞ்சலிக் கூட்டத்தில் மூப்பனார் கலந்து கொள்வார்

சென்னை, ஜன. 21

தமிழ்நாட்டில் த. மா. காவும் அ. தி. மு. கவும் இணைந்து கொள்ளும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம் 2ஆம் திகதி அ.தி.மு.க ஏற்பாட்டில் சென்னையில் நடைபெற உள்ள கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செல்வி ஜெயலலிதா விடுத்த அழைப்பை த.மா.கா தலைவர் ஜி.கே. மூப்பனார் ஏற்றுக் கொண்டுள்ளார். என்று தெரிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க அவைத் தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்கே மூப்பனாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவும், மூப்பனாரும் கலந்து கொள்ளும் முதலாவது பொது நிகழ்ச்சியாக இது இருக்கும் என்று கூறப்படுகின்றது.

(ஐ-6)

# சொத்துச் சேதம் அடைந்தோருக்கு ஒரு லட்சம் ரூபா வரை நஷ்டஈடு!

## புதிய சுற்றறிக்கை வந்தது

வலி. மேற்கு, ஜன. 21

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதிக்குப் பின்னர் வன்செயல்கள் காரணமாக அசையும், அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கான நஷ்டஈடு ஆகக் கூடுதலாக ஒரு லட்சம் ரூபா வரை வழங்கப்பட உள்ளது.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானம் பெறும் விண்ணப்பதாரிகளுக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்படும்.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்றினை வடக்கின் மீள்குடியமர்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சேதமடைந்த வீட்டுக்கு பொறியியலாளர் மதிப்பீடு செய்யும் தொகை முழுவதையும் வழங்குமாறும் சேதமடைந்த தளபாடங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றுக்கு 20 வீதத்தையும் உடுபுடைவைகளுக்கு 5 ஆயிரம் ரூபாவையும் அசையும் சொத்துக்களுக்கு 40 ஆயிரம் ரூபாவை வழங்குமாறும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தமாக ஆகக்கூடுதலாக ஒரு லட்சம் ரூபாவை மட்டுமே ஒருவர் பெற்றுக் கொள்ளமுடியும்.

விவசாயஉற்பத்திப்பொருள்கள், மரங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டாம் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இச்சுற்றறிக்கையினை சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

(ஐ-175-180)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 19 ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

(122606ஏ), (122606பி), (122716ஏ), (123591ஏ), (126511ஏ), (128362ஏ), (128362பி), (128362சி), (128362டி), (128395ஏ), (128395பி), (128402ஏ), (128403ஏ), (128499ஏ)' (128499பி), (128549ஏ), (128549பி), (128549சி), (128549டி), (128560ஏ), (128560பி), (128583ஏ), (128583பி), (128583சி), (128621ஏ), (128621பி), (128654ஏ)' (128654பி), (128656சி), (128654டி), (128654ஈ), (128654எவ்), (128661ஏ), (128667ஏ), (128683ஏ), (128683பி), (128683சி), [128691 ஏ], [128691 பி], [128708 ஏ], [128708பி], [128710 ஏ[, [128710பி], [128722 ஏ], [128722பி], [128739 ஏ], [128740 ஏ], [128801 ஏ], [128801 பி], [128837ஏ [, [128837பி], [128837 சி], [128837டி], [128837 ஈ), [128837 எவ்], [128846 ஏ], [130027 ஏ], [130111 ஏ], [130136ஏ], [130136 பி[, [130171 ஏ]. (130189 ஏ), (133461 ஏ), (133461 பி), (133461 சி), (133635 ஏ), (133635 பி), (133635 சி), (133635 டி), (133657 ஏ), (133711ஏ),

**நல்லூர்**

(128586 ஏ), (128586பி), (128588ஏ), (133690ஏ).

## புத்தாயிரம் ஆண்டில்

# கூட்டுறவு அபிவிருத்திக்கு பல புதிய திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 21

புத்தாயிரம் ஆண்டில் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறை எதிர் நோக்கும் போட்டிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் புதிய ஆண்டில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

நடைமுறைப்படுத்தப் படவுள்ள திட்டங்கள் வடக்கு—கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு:-

★ நவீனமயமாக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் மூலம் நுகர்ச்சி வியாபாரத்தை அதிகரித்தல்.

★ மொத்த விற்பனையில் காசு விற்பனையின் பங்கினை உயர்த்துதல்

★ சிக்கன சேமிப்புக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களை மீளமைத்தல்.

★ கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் பங்களிப்பை அதிகரித்தல்.

★ கால்நடை உற்பத்திப் பொருள்களை மேம்படுத்தல்.

★ தொடர்ந்து இயங்காத சிறிய சங்கங்களை கலைக்கின்ற முன் நடவடிக்கையில் ஈடுபடல்.

★ கணக்காய்வினைத் துரிதப்படுத்தி பூரணப்படுத்தல்.

★ புதிய சங்கங்களைப் பதிவு செய்தல்.

★ புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல்.

★ மாவட்ட கூட்டுறவுச் சபையின் காகிதாதிகளின் விற்பனையை அதிகரித்தல்.

(ஐ-10-17)

# குமணவில் செயலகத்துக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜன. 21

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமண' கப்பலில் இருந்து யாழ். செயலகத்துக்கு எடுத்து வரப்பட்ட பொருள்களை இறக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

இந்தக் கப்பலில் நிவாரணத்துக்கான அரிசி, சீனி என்பனவே எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

தனியாருக்கான பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ள 'ஹெந்தல' கப்பல் ஓரிரு நாள்களில் இங்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9).

# வீட்டுத்திட்டம் திறந்து வைப்பு

காரைநகர், ஜன. 21

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்ட தம்புாட்டி வீட்டுத் திட்டம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தலா ஒரு இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட 36 வீடுகளே அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், ஜேர்மன் உயர் தொழில் நுட்ப நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ--73)

# கண்ணிவெடி விழிப்புணர்வைப் பரப்பும் நாடகப் போட்டி

## பாடசாலைகள் பங்குபற்றலாம்

யாழ். மீள்குடியேற்ற புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சமூக மட்டத்திலான கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழுவினர் பாடசாலை மாணவர்களுக்கிடையே கண்ணிவெடி விழிப்புணர்வு நாடகப் போட்டி ஒன்றினை நடத்தி பரிசுகளும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்க உள்ளனர்.

இது சம்பந்தமாக கண்ணிவெடி விழிப்புணர்வு உத்தியோகத்தர் செல்வி ஜெனிபர் மேசன் சுற்றறிக்கை ஒன்றை பாடசாலைகளுக்கு அனுப்பியுள்ளார்.

தரம் ஆறு தொடக்கம் 13 வரையான வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இந் நாடகப் போட்டியில் பங்கு பற்றலாம் எனவும் —

நாடகத்தின் கரு கண்ணிவெடிகள், வெடிக்கத்தக்க பொருள்கள், ஆபத்துக்கள், அவற்றைக் கண்டால் என்ன செய்ய வேண்டும் என்பன போன்ற சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக அமைய வேண்டும்எனவும்—தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நாடகப் போட்டிகள் முதலில் வலய ரீதியாகவும், பின்னர் மாவட்ட ரீதியாகவும் நடத்தப்படும்.

வலய ரீதியாக நடத்தப்படும் போட்டியில் முதல் இடம் பெறும் நாடகத்துக்குரிய பாடசாலைக்கு பரிசு வழங்கப்படும்.

மாவட்டரீதியிலானபோட்டியில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்குரிய பாடசாலைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும்.

இந் நாடகப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பத்தை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், விழிப்புணர்வுக் குழுவினருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-152)

# கூரைத் தகடுகள்

வன்செயல் காரணமாக ஊர்காவற்றுறைப் பகுதியில் சேதமடைந்த 150வீடுகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கூரைத் தகடுகளை வழங்கியிருந்தது. (ஐ-73)

# ஆங்கில கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய நிலையத்தில் தொடர்பாடலுக்கான ஆங்கிலக் கற்கைநெறி விரைவில் ஆரம்பமாக உள்ளது.

இந்தக் கற்கைநெறியில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பப் படிவங்களை புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# தையல் மனையியல் பொருட்காட்சி

வலிகாமம் தெற்கு, ஜன. 21

வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தையல், மனையியல் பொருட்காட்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் தாவடி வடக்கு, கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதோடு கண்காட்சியையும் திறந்துவைப்பார்.

(ஐ-152)

# ஆலயத்தில் திருடியோர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். கல்வியங்காடு முந்து மாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் — பட்டப்பகலில் மேற்கொள்ளப்பட்ட திருட்டுச் சம்பவம் முறியடிக்கப்பட்டு, திருடர்கள் இருவரும் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

ஆலயத்தில் பூசகர் வசந்த மண்டபத்தில் இருந்தவேளை திருடர்கள் இருவரும் மூலஸ்தானத்துக்குள் சென்று அம்மனுக்குச் சாத்தப்பட்டிருந்த தங்க நகையைத் திருடிக் கொண்டு வெளியேறியதாகவும்—

இவற்றை அவதானித்த பூசகர் கூச்சலிட்டபோது; அங்கு கூடிய பொது மக்கள் திருடர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களால் நையப் புடைக்கப்பட்ட திருடர்கள் பின்னர் கோப்பாய் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

(உ-9-180)

# கல்விக் கண்காட்சி

வலிகாமம் தெற்கு, ஜன. 21

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுக் கல்விக் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இக் கல்விக் கண்காட்சியில் கோட்ட நிலையில் சிறப்பாகத் தெரிவு செய்யப்பட்ட முதல் 3 பாடசாலைகளின் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

ஒவ்வொரு கோட்டத்திலும் இருந்து தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பாடசாலைகளின் பொருள்கள் வலயக் கண்காட்சிக்கு வைக்கப்படும்.

(ஐ--152)


தில்லையம்பதியாள் துணை

மங்களகரமான ஆரம்பம்

அம்பிகை

தொலைத் தொடர்பகம்

21-01-2000 தைப்பூச நன்னாளில் இன்று முதல்

மிகவும் அமைதியான சூழலில் எமது தொலைத் தொடர்புச் சேவையை ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

தொ. பேசி. எண் உள்ளூர் 070.212967

வெளியூர் 0094 70.212967

அம்பிகை தொலைத் தொடர்பகம்

குமரகோட்டம் வீதி, கோண்டாவில்.

(72902)



உ

நீர்வேலியில் நாடகம்

காமாட்சியம்பாள் கோவில் திருப்பணி நிதிக்காக

காமாட்சியம்பாள் விளையாட்டரங்கில்

22 - 01 - 2000 சனிக்கிழமை இரவு

பட்டிமன்றம் (அமுதசுரபி கலாமன்றத்தினர்)

பரதநாட்டியம்

சின்னமணி, செல்வம், தைரியநாதன் இணைந்து வழங்கும்

சத்தியவான் சாவித்திரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

— தொண்டர் சபையினர்

(72903)

உதயன்

## முஷாரப்பின் எச்சரிக்கை

தமது நாட்டுக்கு எதிராக யுத்தம் மூழும் பட்சத்தில் நாட்டைப் பாதுகாக்க அணுஆயுதங்களைப் பயன்படுத்தத் தயங்கப்போவதில்லை என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்விஸ் முஷாரப் தனது சீன விஜயத்தின் பின்னர் சி. என். என். தொலைக் காட்சிக்கு தெரிவித்திருக்கிறார்.

உபகண்டத்தில் உருவாகி வரும் எந்த ஒரு நெருக்கடி நிலைமையையும் எதிர்கொள்ளப் பாகிஸ்தான் தயாராக இருக்கிறது என்பதை இந்த எச்சரிக்கை கோடி காட்டுகிறது.

இத்தகைய நிலையில் பாகிஸ்தானின் புதிய அணுகுமுறை உபகண்ட அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதில் சந்தேகம் இல்லை. மற்றொரு யுத்தம் மூண்டால் அது அணுஆயுத யுத்தமாக மாறலாம்.

சீனத் தலைவர்கள் ஜியாங் ஸெமின், லீபெங், றொங்ஜி ஆகியோருடன் பேச்சு நடத்திய பின்னரே முஷாரப் அணு ஆயுதத் தாக்குதல் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆகவே பாகிஸ்தான் எதிர்கொள்ளும் எந்த ஒரு நெருக்கடியிலும் சீனா பக்கபலமாக இருக்கப்போகிறது என்பது இதன் மூலம் புலனாகிறது.

பாகிஸ்தானும் சீனாவும் மிகவும் நீண்டகால நட்பு நாடுகள். கடந்த ஐம்பது ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்ட ஒவ்வொரு பிரச்சினையிலும் பாகிஸ்தானையே சீனா ஆதரித்து வந்துள்ளது. பாகிஸ்தானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களோ அல்லது சீனாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களோ இந்த நிலைப்பாட்டை மாற்றிவிடவில்லை. இந்த இறுக்கமான உறவு தொடரத்தான் போகிறது.

கார்கில் ஊடுருவல், இந்திய விமானக் கடத்தல் ஆகிய சம்பவங்களில் பாகிஸ்தான் வகித்த பங்கு தற்பொழுது நிரூபிக்கப்பட்டு வருவதும் —

இந்தியாவின் மற்றொரு பகைமை நாடான சீனாவுடன் பாகிஸ்தான் மிக நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்ள ஆரம்பித்திருப்பதும் — எதிர்காலத்தில் எந்த ஒரு பிரச்சினையிலும் இந்தியாவும் பாகிஸ்தானும் சமரசம் செய்து கொள்ள முடியாத நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

இந்தியாவில் வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா ஆட்சி ஏற்பட்ட பின்னர் பாரம்பரிய ரஷ்ய ஆதரவு மட்டும் அல்ல அமெரிக்க ஆதரவும் இந்தியாவுக்கு கிடைத்துவருவது பாகிஸ்தானுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

கார்கில் [illegible] ஆப்கானிஸ்தானில் மறைந்து வாழும் சர்வதேச பயங்கரவாதியான பின்லேடனை ஆப்கானிஸ்தான் நாடு கடத்துவதற்கு பாகிஸ்தான் தனது அழுத்தத்தைப் பிரயோகிக்காமை, 1998 மே மாதம் பாகிஸ்தான் நடத்திய அணுவெடிப்புப் பரிசோதனைகள் ஆகியவை காரணமாக அமெரிக்க —பாகிஸ்தான் உறவு பாதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலையிலேயே சீனாவுடன் மிகவும் நெருக்கமான உறவை வைத்துக்கொள்ள பாகிஸ்தான் முற்படுகிறது.

பாகிஸ்தானின் புதிய இராணுவ ஆட்சியாளர்களின் விட்டுக்கொடுக்காத போக்கு, அணு ஆயுதத் தாக்குதல் எச்சரிக்கை, சீனாவுடனான இறுக்கமான நட்பு ஆகியவை உபகண்டத்தில் மட்டும் அல்ல முழு ஆசியாவிலுமே அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தக் கூடியவை.

# முருகப் பெருமான் தந்தைக்கு உபதேசித்து தகப்பன் சுவாமியான தைப்பூசத் திருநாள்

இன்று தைப்பூச நன்னாள். அரிதினும் அரிதான இந்த மானிடப் பிறவியில் இறைசிந்தனையைத் தூண்டுவதற்கு வாராவாரம், மாதாமாதம் விரத நாள்களை எமக்கு நிரைப்படுத்தித் தந்திருக்கிறார்கள் எம் முன்னோர்கள்.

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பதுபோல அயனங்கள் இரண்டிலும் உத்தராயண காலமாகிய தைத்திருநாளில் தைப்பூசநாள் அதியுன்னதமான சிறப்பான ஒரு நாள்.

சிவசக்தி ஐக்கியத்தைக் குறிக்கும் இந்நாளில் மகர ராசியில் சிவரூபமான சூரிய பகவானும் அதற்கு நேர் எதிரான 7-ஆம் இல்லமான கடக ராசியில் சந்திரனும் கூடிப் பூமிக்கு இருபுறமும் நேர் கோட்டில் தைப்பூசத்துடன் இணைந்த பூரணையுடன் கூடிய நன்னாளாகும். இம் மகரராசியிலேயே எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணப் பெருமான் பள்ளி கொள்ளுகின்ற வியூகநிலையும் தோன்றுகின்றது என்பர் வைஷ்ணவ ஆச்சார்யர்கள்.

அத்தகைய தைப்பூச நன்னாளிலே தான் இறைவன் முதன் முதலில் ஞாலத்தைப் படைத்து, அதிலிருந்து பிரமாண்டம் தோன்றியது என்பதை நினைவூட்ட சில ஆலயங்களில் தெப்போற்சவம் நிகழ்த்தப்படுவதுண்டு.

சிவபெருமான் தன் அதியற்புத ஆனந்தத் தாண்டவமாடியதைக் கண்டு களித்த திருமால் அதை உள்ளூர நினைத்துப் போற்றியதைக் கண்ட ஆதிசேடன் தானும் அத்திருநடனத்தைக் கண்டு களிக்கவே பதஞ்சலி முனிவராகி தில்லையில் தவமிருந்தார்.

### ஞானக் கதிர்

அவருக்கு அருகில் வியாக்கிரபாதர் எனும் புலிக்கால் முனிவரும் சரியைத் தொண்டு செய்ய இருவருக்குமாகவே இறைவன் கருணை கொண்டு தம் திருநடனத்தைத் தில்லையிலே காண வரந்தந்தோம் என்று இறைவன் தாண்டவம் ஆடியருளிய நாளும் இந்நாளேயாகும்

தாமே சக்திமிக்கவர் என்று பெருமை பேசிய வாயு, வருண, அக்கினி தேவர்கள் முன்தோன்றிய சிறு துரும்பை முறையே அசைக்க, நனைக்க, எரிக்க முயன்றபோது இயலாது நின்றவர் முன் நாரதர் தோன்றி மேலான பரம்பொருட் சக்தியை எடுத்துரைத்துக் கர்வத்தை அடக்கி அவர்களுக்கு இறைவன் அருட்சக்தி வழங்கிய நன்னாளும் இந்நாளே.

கற்பகாம்பாள் சமேத கபாலீஸ்வரப் பெருமானைக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற்று ''கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே'' என்று அப்பரடிகளும் ''தேரிழையார் கொண்டாடும் தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்று திருஞானசம்பந்தரும், ''அண்ணலார் நல்விழாப் பொலிவு கண்டார்த்தல், கண்ணிலாம் பயன்'' என்று சேக்கிழாரும் பாடியுள்ளனர்.

சிறப்பு மிக்க இந்நாளில் மக்கள் புத்துணர்ச்சியோடு மணவாழ்வில் மகிழ்ச்சியையும் சகல மங்கலங்களையும் பெறுவதோடு சிவசக்தி ஐக்கியமான முருகப்பெருமானின் மாட்சிமைமிக்க தினமாக அமைவுறுவதனால் முருகன் ஆலயங்களில் அபிஷேகம், திருவிழா நிகழ்த்தப்படுவதையும் நாம் காண்கின்றோம்.

நற்காரியங்களுக்கான ஆரம்ப நாளாகவும், பெண்பிள்ளைகளுக்கு மூக்குக் குத்துதல், காதுகுத்துதல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், திருமணப்பெண் பார்த்தல் போன்றவற்றிற்கும் இந்நாளையே தேர்ந்தெடுப்பர்.

சிவபெருமானுக்கு ''ஓம்'' எனும் பிரணவப் பொருளை உபதேசித்து முருகப்பெருமான் தகப்பன் சுவாமி எனப் பெயர் பெற்ற நாளும் இந்தத் தைப்பூசத் திருநாள் தான்—இந்த தைப்பூச திருநாளில் இயன்ற அளவு தான தருமங்கள் செய்து, அடியார்களுக்கு அமுதளித்து விரதமிருந்து தெய்வானுக்கிரகத்துக்குப் பாத்திரராவோமாக.

**மாஸ்நேயச் செல்வன்**

★

# வன்னியில் புலிகள் பகுதிக்குச்செல்ல பயண அனுமதிபெறபுதியநடைமுறை

வவுனியா, ஜன. 21

**வெளிமாவட்டங்களில் வசிப்போர் வவுனியா ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெறுவதற்கு புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.**

இதன்படி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வருவோர் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி திரும்பச் செல்லலாம். ஆனால்வவுனியாவில் நிரந்தரமாக வசிப்பவர்களும், தென்பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வோரும் படையினரின் அனுமதியைப் பெற்ற பின்னரே பயணத்தை மேற்கொள்ள முடியும்.

இந்த புதிய நடைமுறைக்கான உத்தரவுகள் வவுனியா இராணுவத் தலைமையகத்தால் வவுனியா செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

புதிய பயண அனுமதி நடைமுறை அமுலுக்கு வரும்வரை வவுனியாவில் நிரந்தரமாக வசிப்போரும், தென்பகுதியில் இருந்து வந்து தங்கியுள்ளோரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பயண அனுமதி பெறுவதற்கான புதிய விண்ணப்பப்படிவங்களை வவுனியா செயலகம் தற்போது விநியோகித்து வருகிறது.

குறிப்பிட்ட நபர் வன்னிக்குச்செல்வதற்கான காரணம், போகும், திரும்பி வரும் திகதி என்பவற்றுடன் தமது பெயர் முகவரி என்பவற்றைப் பூர்த்தி செய்து வவுனியாவில் தாம் தங்கியிருக்கும் பிரிவு கிராம சேவகரிடமும் உதவி அரசாங்க அதிபரிடமும் உறுதிப்படுத்தி கையொப்பங்களைப் பெற்றுஅந் தவிண்ணப்பத்தை வவுனியா செயலகத்தில் இயங்கி வரும் புனர்வாழ்வுப் பிரிவினரிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் அந்த விண்ணப்பத்தை வவுனியா பாதுகாப்புப் படை தலைமையகத்துக்கு அனுப்பி வைப்பர். பின்னர் இந்த விண்ணப்பங்களைப்படையினர் பரிசீலனை செய்து அனுமதியை வழங்குவர். அதன்பின்னரே விண்ணப்பித்தவர் தனது பெயரை வவுனியா செயலகத்தில் பதிவு செய்து செயலகம் குறிப்பிடும் திகதியில் பயணம் செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போது வவுனியாவில் வசிப்போருக்கான விண்ணப்பங்கள் செயலகத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அடுத்த திங்கட்கிழமைமுதல்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர்பற்றிஇன்னமும் தீர்க்கமான முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தென் பகுதியில் இருந்து வருவோர் தாம் எங்கிருந்து வருகிறார்களோ அந்தப் பகுதி கிராமசேவையாளர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரிடம் உறுதிப்படுத்தல் கடிதம் பெறுவதா அல்லது வவுனியாவிற்கு வந்து தங்கியிருக்கும் பகுதியில் உள்ள கிராம சேவையாளர், உதவி அரசாங்க அதிபரிடம் உறுதிப்படுத்தல் கடிதம் பெறுவதா என்று இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை என்றும் —

இதனால் வெளி மாவட்டத்தவர்களின் விண்ணப்பங்களை வவுனியா செயலகம் இன்னமும் ஏற்கத் தொடங்கவில்லை எனவும் — தெரிவிக்கப்பட்டது.

தென் பகுதியிலிருப்போர் விமான மூலம் யாழ்ப்பாணம் செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் அனுமதி போன்றதே இப் புதிய நடைமுறை என்று கருதப்படுகிறது.

இந்தப் புதிய நடைமுறையால் படையினரின் அனுமதி கிடைக்க வாரங்கள் மாதங்கள் செல்லலாம் என்றும் —

இதனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிப்போர் தமது அவசர தேவைகளுக்காகப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தென் பகுதிகளில் இருந்து வருவோர் வவுனியாவில் தங்கி நின்று இந்தப் பயண அனுமதியைப் பெற பெரும் அலைச்சல்களைச் சந்திக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-164)

## நாளை

தை. 08

**சனிக்கிழமை**

திதி: பிரதமை

முற்பகல் 7.18 வரை

நட்சத்திரம்: ஆயிலியம்

பின் இரவு 3.20 வரை.

சுபநேரம்: 3.35—5.05

ராகுகாலம்: 9.35—11.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பலவீனமில்லாத மனிதர்கள் கடுமையானவர்கள்; அவர்களை எதற்கும் பயன்படுத்திக்கொள்ள முடியாது.

அனடோல் பிரான்ஸ்

## மொழிபெயர்ப்பாளருக்கு இங்கேயே பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவியில் பட்டதாரிப் பயிலுனர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான தொழில் தேர்ச்சிப் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிக்காக கொழும்பு செல்வதில் உள்ள பிரச்சினைகளை யாழ். அரச அதிபர், அரசகரும மொழிகள் திணைக்கள ஆணையாளருக்கு எடுத்துக் கூறியதை அடுத்து இந்தப் பயிற்சியை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மொழி பெயர்ப்பாளர்களாக 41 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற அரசகரும மொழிகள் திணைக்கள உதவி ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ், எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் இந்தப் பயிற்சி நெறி யாழ். செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

## பரிசளிப்பு

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய பரிபாலன சபையினர் நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்புவிழா இன்று வெள்ளி மாலை4மணிக்குநடைபெறும்.

நீண்ட காலமாக ஆலயப் பூஜைகளை நிகழ்த்தி ஓய்வு பெறும் சோமசுந்தர சர்மாவின் சேவைநலன் பாராட்டு விழாவும்நடைபெறும். (ஐ-27

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஓர்கன், கிற்றார்

மேலைத்தேய இசைப் பயிற்சி (வெளி — உள்) தந்தி மூலம் கற்றல், சுயமாகப் பாட்டெடுத்தல், நோட்ஸ் எழுதுதல், கோட்ஸ் பிடித்தல், லீட்றிதம், பேஸ்கற்றல், கிறிஸ்தவப் பாடல் கற்றல், பின்னணி இசை கற்றல் என்பன ஆரம்பம். 21-01-2000 2.30 மணி. தொடர்பு: 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(72894)

### இசை வகுப்பு

ஓர்கன், கிற்றார், மெலோடிக்கா, றெக்கோடர், வீணை, வயலின், புல்லாங்குழல், வாய்ப்பாட்டு வகுப்புகள் ஆரம்பம். 21-01-2009 தொடர்பு: 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(72893)

### தவறி விட்டது

சரசாலை வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த செல்லையா ஞானசேகரம் (பூசகர்) என்பவரது தேசிய அ.அ, விஷேட அ.அ என்பன(19-01-2000) அன்று யாழ்ப்பாணத்தில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இராசம் தொலைத்தொடர்பு சேவை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(72872)

சுதந்திரபுரம் வயாவிளானைச் சேர்ந்த சிவனடி மணிமாறன் ஆகிய எனது விஷேட அடையாள அட்டை 0907009766 17-01-2000 அன்று யாழ். பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வெங்கேஸ்வரா விறகு காலை நீராவியடி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (72879)

### விற்பனைக்கு

வொக்ஸ்வகன் 3 சிறி, 9 சிறி, 32-,64- தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள டீசல் A/C கார்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கி. தயாபதி. கிராம்புவில், சாவகச்சேரி. T.P. FAX — 070—212300.
(72866)

### கணிதம் 2000

மிக உயர்ந்த பெறுபேறுகள் அடைய ஆண்டு 6 - O L வரை (வாரம் 100 கேள்விகள் கொண்ட பாட அலகுகள் மூலம்) கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோயிலடி சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி.
(72833)

### மணமகன் தேவை

இந்து கௌரவமான நற்குடும்பத்தைச் சேர்ந்த 34 வயது செவ்வாய் தோசமற்ற கிரகபாவம் 35, சந்திரபாவம் 6, தகுந்த சீதனம். அரசாங்க அல்லது வங்கி நல்ல உத்தியோக மணமகன் தேவை. சகோதரர்கள் கல்வியுடன் வெளிநாட்டு உத்தியோகத்தில் உள்ளார்கள். மாற்றுச் சம்மந்தத்துக்கும் விரும்புபவர் விவரங்களுடன் கடிதத்தில் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 991, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (72827)

### சோதிடம்

பொய்யா மொழி சோதிடம் எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். தினமும் மாலை 2 மணிக்குப் பின் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் சந்திக்கலாம்.
(72798)

## சமையல் வேலைக்கு ஆள் தேவை

சமையல் வேலையில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை.

தொடர்பு:— றிக்கோ,
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[72897]

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் இ. பிரபேஷ்கண்ணன்
அவர்களின் அன்புத்தந்தையார்

### வல்லிபுரம் இராஜேஸ்வரன்

அவர்கள் 2000 - 01 - 18 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1 ஆம் வருட வர்த்தகப்பிரிவு மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(72880)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 07 — 06 — 1922 மறைவு 22 — 12 — 1999

### அமரர் அப்பாக்குட்டி இராசையா

மானிடத்தில் மக்களோடு
ஒரு மைந்தனாக
வையகத்தில் ஜனனமாகி
மென்மையாக பண்பாக
மக்களோடு இனிதாகப் பழகி
இல்லறத்தில் சிறப்பான
பல் கலைக்கழகமாக விளங்கி
சிந்தனைச் செம்மலராக
செம்மையான அரச கொள்கையுடன்
சமுதாய விள்க்காக இருந்து
அமரத்துவம் அடைந்தீரே!

**அமரர் அப்பாக்குட்டி இராசையா**
அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வுகள் 21-01-2000 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்..

இரா. சிவனேசன் (சைக்கிள் கடை,)
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 13 — 07 — 1963 மறைவு: 22 — 12 — 1998

### அமரர் இராசையா இரகுநாதன்

இளமையான கோலத்தோடு
பிரான்ஸ் மாநகரினிலே வாழ்ந்து
இல் வாழ்வு காண முன்னும்
எம்மையெல்லாம் வந்து காண முன்னும்
அமரத்துவம் அடைந்திரே!
பன்னிரு திங்கள் சென்றாலும்
பாசத்திருமுகத்தை நாம் மறவோம்.

குடும்பத்தினர்.

(72908)

## காரைநகரில் இளைஞர் பயிற்சிநெறி

காரைநகர், ஜன. 21
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் இளைஞர் கழக அங்கத்தவர்களுக்கான நடமாடும் பயிற்சிநெறி விரைவில் காரைநகரில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி நெறியில் தையல், கேக் ஐசிங், தலையலங்காரம், பூவேலை உட்பட பல அடிப்படைப்பயிற்சி நெறிகள் 90 நாள்கள் நடத்தப்படும். இவற்றில் 50 யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஐ 73)


## தயா நகைப் பூங்காவிற்கு

# இன்று 1 ஆவது பிறந்த நாள்

ஆண்டொன்று பிறந்தது அதனால் தயாநகைப் பூங்காவிற்கு வயதொன்று ஆனது
வாடிக்கையாளர்களின் வரவு பெருகிவரும் வேளை அசல் ''22'' கரட் தங்கநகைகளை என்றும் வழங்குபவர்கள்
**தயா நகைப் பூங்கா**
கட்டித் தங்கத்தில் கெட்டியான வேலைப்பாடுகள் கொண்ட தங்க நகைகளை உருவாக்குவோர்
**தயா நகைப் பூங்கா**
ஆதரவு தந்த எம் இனிய வாடிக்கையாளர்களுக்கும் இனியும் எம்மோடு இணையும் அன்பு நெஞ்சங்களுக்கும்
இதயம் நல்க நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எழில் குன்றா அழகிய தங்கப்பவுண் நகைகளை ஓடர் கொடுத்து செய்து பெற்றிட

# தயா நகைப் பூங்கா

**இல. 213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
உரிமையாளர்: செல்வரெட்ணம் தயாநந்தன்

விளம்பர ஆக்கம் - விளம்பரப்புயல் மேஜர் ஷண் (சி/10731)

# காங்கேசனில் உள்ள 15 கைதிகள் யாழ். மன்றில் ஆஜர் செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், ஜன. 21
காங்கேசன்துறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு முகாமில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 15 சந்தேக நபர்களும் இம் மாத இறுதியில் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படலாம் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாவின் பலபகுதிகளிலும் சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்ட பன்னிரண்டு இளைஞர்களும் மூன்று யுவதிகளும் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இந்த முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான பொலீஸாரின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இவர்களை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது.

யாழ். நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள், பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் இதுவரை காலமும் அநுராதபுர நீதிமன்றிலே ஆஜர் செய்யப்பட்டு வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுபவர்கள் யாழ். குடா நீதிமன்றங்களிலே ஆஜர் செய்யப்படவேண்டும் என்று பொலீஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபர் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி தெற்கு விவசாயிகள் அறுவடைசெய்ய முடியாத நிலை

தென்மராட்சி, ஜன. 21
தென்மராட்சி தெற்குப் பகுதிகளான தனங்களப்பு, அறுகுவெளி, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் தொடரும் ஷெல் வீச்சுக்களால் 4 ஆயிரத்து200 ஏக்கர் காணிகளில் விளைவிக்கப்பட்ட நெற்பயிரை அறுவடை செய்ய முடியா நிலையில் விவசாயிகள் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதகாலமாக தமது வயல் நிலங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட முடியாத நிலைமையில் விவசாயிகள் இருந்து வருகிறார்கள். (இ-117)

## மன்னார் மக்களின் அ. அட்டையைப் பெறுவதிலுள்ள பிரச்சினையை தீர்க்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன, 21
மன்னாரிப் பகுதி இளைஞர் யுவதிகள் தமது அடையாள அட்டைகளை மீண்டும் மன்னார் அஞ்சல் அலுவலகத்திலேயே பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தமிழீழ விடுதலை இயக்கம், மன்னார் அஞ்சல் அத்தியட்சகருக்கும் யாழ்ப்பாணம் பிரதி அஞ்சல்மா அதிபருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன்னாரிப் பகுதி இளைஞர் யுவதிகள் கடந்தகாலங்களில் அடையாள அட்டைகளை மன்னார் அஞ்சல் அலுவலகத்திலேயே சிரமமின்றிப் பெற்று வந்தனர்.

தற்போது இந்நடைமுறை இடைநிறுத்தப்பட்டு இவர்கள் தமது அடையாள அட்டைகளை யாழ்ப்பாணம் அஞ்சல்மா அதிபர் அலுவலகத்துக்கு விண்ணப்பித்தே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

போக்குவரத்துச் சிரமங்கள் நிறைந்த இக்காலவேளையில் விண்ணப்பங்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி, பல மாதங்களாக தவங்கிடந்து அடையாள அட்டைபெறும் இந்த நிலைமையினால் இளைஞர், யுவதிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகவேண்டி இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-15)

## கண் சோதனை இன்று

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண் பரிசோதனை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு யாழ். வைத்திய நிலையத்தில் (வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக) இன்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெறும்.

பி.ஜே. பர்ணாண்டோ ஸ்தாபனத்தைச் சேர்ந்த வயன் எ. ஜெயக்குமார் பரிசோதனையை மேற்கொள்வார். (உ-15)

## மணிவிழாவும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், ஜன. 21
மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான வீ. சின்னத்தம்பியின் மணி விழாவும் எழுத்தாளர் ஒன்றுகூடலும் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், கலாநிதி க. குணராசா ஆகியோர் விழா நாயகனுக்கு ஆசியுரை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா, புத்தொளி ந. சிவபாதம், யாழ் மேற்கு போருட்திட்ட இணைப்பாளர் க. குணேந்திரநாதன், யாழ். மாவட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் இ. தவராஜா, ஓய்வுபெற்ற அதிபர் அ. முருகவேள் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

மணிவிழாவின் ஓர் அங்கமாக "தமிழ்மொழி கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்ற தலைப்பிலான ஆய்வரங்கு நடைபெறும்.

இந்த ஆய்வரங்குக்கு யாழ். பல்கலைக்கழக உயர்மட்டப் படிப்புகள் பீடத்தில் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவரும் கல்வியியற்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சபா. ஜெயராஜா, யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை, ஜப்பானிய பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செ. திருநாவுக்கரசு, யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதன் ஆகியோரின் ஆய்வுரைகளும் இடம்பெறும். (இ-4-15)


## இசுசு 26 ஸ்ரீ இஞ்சினுக்கான கூறு விலை கோரல்

எமது சங்கத்துக்குத் தேவையான நல்ல நிலையில் உள்ள இசுசு லொறிக்கான 26 ஸ்ரீ இஞ்சினும் அதனுடன்தொடர்புடைய உதிரிப்பாகங்களும் வழங்கக் கூடியவர்களிடம் இருந்து கேள்வி கோரப்படுகின்றது. விலை விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு கடிதத்தினை அரக்குமுத்திரையிட்டு "பொதுமுகாமையாளர், மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய்" என்ற முகவரிக்கு 25-01-2000 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்

(சி/10722)



# வியாபார இடம் மாற்றம்

புதுப்பொலிவுடன்

# நியூ லிங்கம் மோட்டோஸ்

(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

எமது ஸ்தாபனம் இன்று (21-01-2000) வெள்ளிக்கிழமை முதல்

இல. 11, கே. கே. எஸ். வீதி, சுன்னாகத்தில்

அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.



சைக்கிள் · தண்ணீர்ப் பம் · மோட்டார் சைக்கிள் · லான்ட் மாஸ்ரர் · இயந்திர உதிரிப்பாகங்கள்

விற்பனையில் சுன்னாகத்தில்

பல வருட அனுபவமும் நன்மதிப்பும் பெற்ற ஸ்தாபனத்தார்

# நியூ லிங்கம் மோட்டோஸ்

இல. 11, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

(73829)

# பத்திரிகையாளர் மீதான அச்சுறுத்தலுக்குக் கண்டனம்

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் உள்ள பத்திரிகையாளர்கள் மீது அரசாங்கம் மேற்கொண்டு வரும் அச்சுறுத்தல் மற்றும் கெடுபிடிகளைக் கண்டித்து செய்தித் தணிக்கைக்கு எதிரான 'ஆர்ட்டிக்கிள் நைன்ரீன்' என்ற சர்வதேச அமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை எழுதி உள்ளது.

கடந்த மாதம் கொழும்பு நகர சபை மண்டபத்தில் ஜனாதிபதி மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கும் பத்திரிகையாளர்கள் சிலருக்கும் தொடர்பிருப்பதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியதை அடுத்து 'ஆர்டிக்கிள் நைன்ரீன்' அமைப்பு இந்தக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக பத்திரிகை ஆசிரியர்கள் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை என்றும் —

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் அரசை பொதுவாக விமர்சனம் செய்து வரும் பத்திரிகையாளர்களின் நம்பகத்தன்மையை இல்லாமல் செய்து விடும் என்றும் — அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.


## தென்னிந்திய திருச்சபை

மானிப்பாய்

## தொழிற் பயிற்சி நிலையம் (V.T.C)

மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும்

பயிற்சிகள் ஆரம்பம்: 03 - 02 - 2000

★ கேக் ஐசிங் ★ உணவு தயாரித்தல் ★ பூவேலை ★ உடை தயாரித்தல் ★ சிகையலங்காரம் ★ கைவேலை

ஆகியன பயிற்றுவிக்கப்படும்.

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

23-01-2000 தொடக்கம் 01-02 2000 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இடம்: கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்.

(72891) - நிர்வாகி



## வாழ்த்துகின்றோம்

ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.) யின் யாழ். மாவட்டப் பிரதம அமைப்பாளரும் நெடுந்தீவின் ஈ.பி.டி.பி. பொறுப்பாளராகப் பணியாற்றியவருமான

கௌரவ வேலும்மயிலும் குகேந்திரன் பா. உ.

(தோழர் V. K. ஜெகன்)

அவர்களும்

கௌரவ சின்னையா தவராசா பா. உ.

அவர்களும்

யாழ். மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டமை குறித்து எம் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர், பணியாளர், ஊழியர்கள்.

பிரதேச சபை, நெடுந்தீவு.

(சி/10727)


## முதலாண்டு நினைவலைகள்

மலர்வு: 04 — 04 — 1940



உதிர்வு: 22 — 01 — 1999

### திருமதி சிவராஜலிங்கம் மீனலோஜினி

திதி: 10 - 02 - 2000

எங்கள் ஒளி விளக்காய்த்
திகழ்ந்த திருவிளக்கே
ஆண்டு ஒன்று சென்றதம்மா
ஒரு கணப் பொழுதில்
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்ற தாயே
உங்கள் நினைவு எம் நெஞ்சை
விட்டு அகலாதம்மா!
ஆறாதம்மா எமது துயர்!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

தாயார், கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டை.

(72890)

# தியாகராஜ சுவாமிகள் ஆராதனை

வலிகாமம் தெற்கு, ஜன. 21

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு முதன் முறையாக தியாகராஜ சுவாமிகள் ஆராதனை நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

இப்பாடசாலை இசை ஆசிரியர் பிரம்மஸ்ரீ ம. தாணுநாத சர்மாவின் ஏற்பாட்டில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் மருதனார்மடம் நுண்கலைப்பீட சங்கீத விரிவுரையாளர் க. இராமநாதனின் இசைக்கச்சேரியும் அதனைத் தொடர்ந்து மாணவர்களுடைய நிகழ்வுகளும் தியாகராஜ சுவாமிகள் பற்றிய உரைகளும் ஆராதனைகளும் நடைபெறும். (ஐ-152)

# பாடசாலை பஸ் சேவைகள்

வடமராட்சி, ஜன. 21

யாழ். குடாநாட்டில் பாடசாலை பஸ்சேவைகள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. குடாநாடு முழுவதும் 28 பாடசாலை பஸ் சேவைகள் சீராக நடைபெற்று வருகின்றன.

இன்னும் பல பகுதிகளில் பாடசாலை பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் போதிய பஸ் வண்டிகள் இன்மையால் சேவைகளை ஆரம்பிக்க முடியாமல் இருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார். (ஐ-173)

# அதிபர்களின் சுய விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றும் அதிபர் தரங்களில் உள்ளவர்களின் சுயவிவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாகாணக்கல்வி அமைச்சு சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களையும் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அதிபர் தரங்களில் உள்ளவர்களின் சுயவிவரங்களைச் சேகரிக்கும் வகையில் தேவையான பத்திரங்கள் வலயக் கல்விப் பணிமனையில் விநியோகிக்கப்படுவதாகவும் —

அதிபர்கள் ன்று முதல் அவற்றைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-7)


## N. E. I.

## நடராஜா ஆங்கிலக் கல்வி நிலையம்

சட்டநாதர் கோவிலடி, நல்லூர்.

A/L 2000,01,02

கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தமிழ் - K. அருள்

அளவையியல் / I. Q. — K.S. கருணா

புவியியல் - S.R. பாலா

இந்துநாகரிகம் - பிரபல ஆசிரியர்

(72892)


## நல்லூர் பிரதேச சபை

# வரவு செலவுத் திட்டச் செய்தி ஆண்டு - 2000

பிரதேச சபையின் செயற்றிட்டங்களையும் இச்சபை ஆற்ற வேண்டிய சேவைகளையும் திறம்படச் செய்வதற்கு நல்லூர் பிரதேச மக்கள் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சிக்கு அளித்த பேராதரவினால் பதவியேற்று இரண்டாம் வருடத்தில் செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்களுக்கான வரவு செலவு அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். யாழ். மாவட்டத்தில் பிரபல கல்லூரிகளான தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மற்றும் அதி உயர் கல்விக்கூடமான சர்வகலாசாலை மற்றும் விவசாயத்திணைக்களம், வைத்தியசாலைகள், பொதுச் சந்தை, வடபிராந்திய போக்குவரத்துச்சாலை போன்ற பலவற்றை அடக்கியுள்ள இப்பிரதேசம் அபிவிருத்தியடைந்து யாழ். நகருக்கு அடுத்த நகராக விளங்க வேண்டுமென்ற வகையில் இவ்வாண்டில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

இப்பிரதேச மக்களின் தேவை கருதி கடந்த ஆண்டு கோண்டாவிலில் ஒரு கிளை நூலகமும், ஒரு கிளை ஆயுர்வேத வைத்தியசாலையும் திறக்கப்பட்டுள்ளன. அதே போல் இவ்வருடம் கொக்குவில் மேற்கில் அப்பகுதி மக்களின் வேண்டுதலை நிறைவு செய்யும் வகையில் ஒரு கிளை ஆயுர்வேத வைத்தியசாலை தை மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதுமட்டுமல்லாது வைத்திய பீட மாணவர்கள், விரிவுரையாளர்கள் நலன் கருதி சிறந்த விடுதி ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சபைக்கு கூடுதலான வருமானத்தை ஈட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் திருநெல்வேலிப் பொதுச் சந்தை, யு. என். டி. பி. நிறுவன உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் அண்மைக்கால அனர்த்தங்களினால் சேதமுற்றிருக்கும் பொதுச் சந்தை மேல் மாடிக் கடை புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்துடன் ஆடியபாத வீதிப்பக்கத்தில் மாடிக் கடைத் தொகுதி ஒன்று நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைக்குட்பட்ட வசதியற்ற மாணவர்களின் நலன்கருதி வருடாவருடம் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் குறிப்பிட்டளவு தொகைப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது. சகல சனசமூக நிலையங்களுக்கும் பலவித உதவிகள் அவ்வப்போது செய்யப்பட்டுள்ளது. மேலும், சேதமடைந்த சனசமூக நிலையங்களுக்கு அவற்றைத் திருத்தவும் தளபாடங்கள், பத்திரிகைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சனசமூக நிலைய உறுப்பினர்கள், தொண்டர்களின் உதவியுடன் சிரமதான அடிப்படையில் செய்யக்கூடிய திருத்த வேலைகள் செய்யப்படவுள்ளது. இதனால் சபைக்கு செலவு குறையவும் தரமான வேலைகளைச் செய்யவும் வாய்ப்புண்டு. சபையின் வேலைகளுக்கு ஏற்ற ஆளணி, இன்மையால் முக்கிய பணிகள் செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டாலும் தற்போதுள்ள ஆளணி, வாகன வசதியுடன் சிறந்தசேவைகளைச்செய்யக்கூடியதாகவுள்ளது.

கொக்குவில் உபஅலுவலக ஆதனவரி நீண்டகாலமாக பழைய மதிப்பீட்டுப்படியே அறவிடப்பட்டு வருவதால் பல இலட்ச ரூபாவை இழப்பதோடு அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி வருவாயும் இல்லாமற் போகின்றது. மீளாய்வு செய்யப்பட்ட ஆதனவரியை அறவிட்டு அதன் மூலம் பெறப்படும் வருவாய் மூலம் சிறந்த சேவையாற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வர்த்தக நிலையங்களின் ஆதன வரி அறவிடப்பட்டு அவற்றிற்கான உரிமம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன். அங்கீகாரம் பெறப்படாது அமைக்கப்பட்டு வியாபாரம் நடத்தும் நிலையங்களின் உரிமம் வழங்கப்படுவதும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானமாக ரூபா 3,62,411.00 எனவும் செலவாக ரூபா 3,62,245.00 எனவும்வரவுசெலவுத்திட்டஅறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நவீன வசதிகளுடன் கூடிய, இறைச்சிக்காக மிருகங்கள் கொல்லப்படும் கொல்கள வேலைகளும், தொழிலாளர்களுக்கான நான்கு விடுதிகளுக்கான வேலைகளும் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இச்சபையின் வளர்ச்சியில் பல வகையில் உதவி வரும், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரான திரு. வி. கே. ஜெகன் அவர்களுக்கும் சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள். ஊழியர்களுக்கும் பிரதேச மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்து தொடர்ந்தும் வேண்டிய உதவிகளை வழங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

சகல வழிகளிலும் கிடைக்கக் கூடிய வளங்களை உபயோகித்து மக்கள் வழங்கும் வரிப்பணத்தின் மூலம் நல்லூர் பிரதேச அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வேன் என்பதையும் இப்பிரதேச சபையை நகர சபையாக மாற்றி மேலும் சேவைகளை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து புத்தாயிரம் ஆண்டுக்கான எனது பிரதேச சபையின் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரதேச சபையின் வளர்ச்சியில் அனைவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் வரவேற்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க. மணிபல்லவராஜன், (ஜே. பி. யூ. எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

தலைமைச் செயலகம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
10.02.2000

(சி/10725)

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

அபிவிருத்திச் சங்கப்

பொதுக்கூட்டம்

மேற்படி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் 2000-1-23 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 (புதிய நேரம்) வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் தவறாது சமுகம் கொடுக்குமாறு வேண்டுகின்றோம்.

இ. சிவபாதசேகரம் — தலைவர்
த. விஜயபாலசிங்கம் — செயலாளர்

(வி/10734)

எந்நேரமும்

இலகுவில் பெறக்கூடிய வகையில்
பாதுகாப்பானதும் அமைதியானதும் ஆன சூழலில்

குறைந்த செலவில்

தொலைத் தொடர்பு சேவையைப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

தீபா தொலைத்தொடர்பு சேவை

தொலைபேசி எண்:
உள்ளூர்: 021 - 3425
வெளியூர்: 0094 - 21 - 3425

தீபா

தொலைத்தொடர்புச் சேவை நிலையம்

Theepa Communications Centre

34,
Kanagaratnam Road,
Ariyalai,
JAFFNA.

34,
கனகரத்தினம் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(72912)

BESKORTS (Lodging)

பெஸ்க்கோட்ஸ்

(தங்கு விடுதி)

கொழும்பு நகருக்கு வருவோருக்கு எல்லா வசதிகளுடனும் குடும்பத்துடனோ, தனியாகவோ தங்குவதற்கு ஏற்ற இடம் "பெஸ்க்கோட்ஸ்" தங்குவிடுதி (BESKORTS LODGING)

இணைந்த குளியலறை, அறையிலேயே தொலைத்தொடர்பு வசதி, மருத்துவ வசதி, நகரத்தின் மத்தியில் அமைந்தது

BESKORTS LODGING.
79, Messenger St. Colombo 12.
T. Phone - 338562, 329043

(72648)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 21
வண்ணை — நீராவியடி ஜெயஸ்ரீ விநாயகர் ஆலய தைப்பூசத் திருவிழா இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (ஜ-7)

★ ★ ★

தைப்பூசத் திருநாளையொட்டி ஆனைக்கோட்டை அருள்மிகு சரைப்பிரான் அதி விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.
(ஜ-100)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயிலில் தைப்பூசத் தினமான இன்று நண்பகல் சங்காபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து மாலை 4 மணிக்கு ஆறுமுகப் பெருமான் மஞ்சத்தில் வலம் வருவார். (இ-3)

★ ★ ★

சாவாலை நுணுவில் சிறம்பர விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தையொட்டி இன்று மாலை 4 மணிக்கு விசேட அபிஷேகமும், பூசையும் சண்முகார்ச்சனையும் இடம்பெறும். (இ-3)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயிலில் தைப்பூசத்தை ஒட்டி இன்று காலை 6.30 மணிக்கு சங்காபிஷேகமும், பூசையும், சுவாமி வீதியுலாவும் இடம்பெறும்.
(இ-3)

★ ★ ★

யாழ் வண்ணை வடகிழக்கு கொண்டலடி அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேக தினமான இன்று சங்காபிஷேகம் காலை 10 மணிக்கு நடைபெறும். (இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆக்கியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலில் இன்று நண்பகல் 11.30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை நடைபெற்று பின் சுவாமி மஞ்சத்தில் வீதி வலம் வருவார். (இ-30)

★ ★ ★

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி கோயிலில் இன்று காலை 10 மணிக்கு தைப்பூசம் திருவிழா விசேட அபிஷேகம் பூசையுடன் நடைபெறும்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பஜனை - கூட்டுப் பிரார்த்தனைகள் இடம்பெறும். (இ-30)




# கொக்குவில்மத்தி, ஜொலிஸ்ரார்ஸ் நேற்றைய ஆட்டங்களில் வெற்றி

## சபாநாத் சதம் அடித்தார்

யாழ்ப்பாணம், ஜன. 21
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையேயான "விக்ரம் — ராஜன் — சுந்து" ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் ஜொலி ஸ்ரார்ஸ் அணியும் வெற்றி பெற்றுள்ளன.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் மானிப்பாய் பரிஷ்க்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதில் கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் கே. சபாநாத் சிறப்பாக விளையாடி ஆட்டமிழக்காது சதமடித்தார்.

ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் வென்றது.

இந்தத் தொடரின் அடுத்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணியும் நாளை விளையாடவுள்ளன
(இ-4-8)

## இந்திய - பாக் அணிகள் இன்று மோதல்

சிட்னி, ஜன. 21
மூன்று நாடுகள் பங்குபற்றும் 'கால்ட்டன் அன் யுனைட்டட்' கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று ஹோபட்டில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை எதிர்த்து விளையாடும்.

இன்றைய ஆட்டம் பகல் நேர ஆட்டமாகவே நடைபெறும்.

இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் ஆஸ்திரேலிய அணி முதலிடத்திலும், பாகிஸ்தான் அணி இரண்டாவது இடத்திலும் உள்ளன.

போட்டித் தொடரில் பங்குபற்றிய இன்னோர் நாடான இந்திய அணி இதுவரை எந்தப் போட்டிகளிலும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8-4)

## இன்றைய ஆட்டங்கள்

கொழும்பு, ஜன. 21
தற்போது நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட இளைஞர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று — நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு—

★ காலி சர்வதேச விளையாட்டு மைதானத்தில்— சிம்பாப்வே அணி எதிர் நபீய அணி.

★ மாத்தறை உயன்வத்த விளையாட்டு மைதானத்தில் — பங்களாதேஷ் அணி எதிர் கென்ய அணி.

★ கண்டி அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் — ஹொலண்ட் அணி எதிர் தென்னாபிரிக்க அணி.

★ மூடல்ல மைதானத்தில் — அயர்லாந்து அணி எதிர் அவுஸ்திரேலிய அணி.
(ஜ-8-4)

# 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிண்ண போட்டி முடிவுகள்

## சூப்பர் - 8 ஆட்டங்கள்

கொழும்பு, ஜன. 21
இலங்கையில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் நேற்றைய ஆட்டங்களில் இலங்கை, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அணிகள் வெற்றிபெற்றன.

இலங்கை - நேபாளம் அணிகளுக்கு இடையில் மொறட்டுவ மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் வி.வி.வி. மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களால் வென்றது.

மேற்கிந்தியத் தீவுகள் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் என்.வி.வி. மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.
(இ-4-8)

நீர்வேலி

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

மணவாளக்கோல விழா

இன்று (21 - 01 - 2000) வெள்ளிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெற்று மாலை 4 மணியளவில் எம்பெருமான் மஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம் வந்து அருட் காட்சி தந்தருளுவார். அச்சமயம் கற்பூரம் ஏந்தி அடியார்கள் வழிபாடு செய்யலாம். அன்றைய தினம் அடியார்கள் அனைவரும் வருகைதந்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உபயம்
சாரங்கா நகைமாடம்

இன்று

சாரங்கா நகை மாடம்

தனது 3 ஆவது அகவையைப் பூர்த்தி செய்கின்றது

என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றார்கள்.

சாரங்கா நகை மாடம்

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel. & FAX:- 2480

தலைமையகம்:
அருள் முருகன் நகையகம்,
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளையகம்:
சிவா நகை மாடம்
யாழ். வீதி,
சாவகச்சேரி.

(வி/10733)

மக்கள் நலன்புரிச் சங்கம்

யாழ். மாவட்டம்

மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவரினால் நேற்றைய உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தன்னிச்சையான செய்திக்கு மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாக சபையினராகிய நாம் மனவருத்தம் அடைகின்றோம். நிர்வாகசபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் முடிவின்படி பொதுச்சபைக் கூட்டம் கூடிய விரைவில் கூட்டப்பட்டுச் சங்கத் தலைவரால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் யாவும் ஆராயப்படும் என்பதை நலன் விரும்பிகள், பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி.

— செயலாளர்

மக்கள் நலன்புரிச் சங்கம்,
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

(72917)

# படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தயாரான நிலையில் இராணுவத்தினர் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் போர்ச்சூழல் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட மூன்று ஆட்லறி ஷெல்கள் முகாமுக்குள் விழுந்து சேதங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிந்தது.

ஆனையிறவின் தென் பகுதியிலிருந்தே விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதாக அங்குள்ள படையினர் தெரிவித்தனர்.

ஆனையிறவு முகாமைச் சுற்றி நூற்றுக்கணக்கான காப்பரண்கள் இருக்கின்றன. இவற்றிலுள்ள படையினர் எந்நேரமும் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவுப் பகுதி முழுவதும் இர்ராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வீதி ஊடாக இயக்கச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்தே ஆனையிறவு ராணுவத் தளத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் போது இயக்கச்சிக்கு சமீபமாக பொதுமக்கள் நடமாட்டம் இருந்ததுடன் இயக்கச்சியிலும் படையினர் நிலைகொண்டிருப்பதை காணமுடிந்தது.

வெற்றிலைக்கேணி, தனங்களப்பு பகுதிக்கு நாம் கூட்டிச்செல்லப்படவில்லை. அங்கு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் அடிக்கடி இடம்பெறுவதாலே அங்கு நாம் கூட்டிச் செல்லப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இப்படிச் செய்தியாளர்கள் தெரிவித்தனர். (இ-3-5-9-10)

## பவுஸர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சாரதியிடம் பணம் தரும்படி கேட்டனர் என்றும் -

சாரதி பணம் கொடுக்க மறுத்ததும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதில் பவுஸர் சாரதி கொல்லப்பட்டார். காயமடைந்த இரு ஊழியர்களும் பொலன்னறுவ, மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு பவுஸர்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின. (இ-3-6-7)

## றேடியோ தொடர்புத் தொலைபேசி
# முறைகேடான பாவனை குறித்து ரெலிக்கொம் அதிகாரி எச்சரிப்பு

குடாநாட்டில் றேடியோ தொடர்பு மூலம் வழங்கப்பட்டுள்ள தொலைபேசிச் சேவையில் இடம்பெற்றுவந்த முறைகேடு ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சேவையை பெற்றுள்ளவர்களில் சிலர் தொடர்பைப் பெற்று பலமணிநேரம் தொடர்ந்து வைத்திருப்பதாகவும் -

இதன் காரணமாக அந்தச் சேவையில் இணைப்புப்பெற்ற ஏனையோர் தொடர்புகளைப் பெறமுடியாத நிலை காணப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து நேற்று நடவடிக்கை மேற்கொண்ட ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகள் 15 பேரைக் கண்டுபிடித்தனர் என்றும்- அவர்களின் தொடர்புகள் உடன் துண்டிக்கப்பட்டன என்றும் - மேலும் கூறப்பட்டது.

இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களின் இணைப்புக்கள் முற்றாகவே துண்டிக்கப்பட்டுவிடும் என ரெலிக்கொம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-3)

## இராட்சத மீன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மீனின் வயிற்றில் பெறுமதியான "அம்பர் வாசனைத் திரவியம்" இருக்கக்கூடும் எனக் கருதி மீனவர்கள் அதனைக் கூறுபோட முனைந்தனர் எனவும் -

எனினும் மீனவர்களிடையே இவ்விடயம் தொடர்பாக பிணக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலீஸார் தலையிட்டு மீனைத் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவது.

இந்த நான்கு கட்டப் பேச்சுக்களின் பின்னர் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னால் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்படுகின்றது. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு பாதுகாப்புப் பிரிவினரால் அனுமதி வழங்கப்படுவது போன்று கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் களுக்கும் பாதுகாப்பு அனுமதி வழங்குவது குறித்து ஆராயப்படுகின்றது - என்றார்.


**விக்னா**
**கல்வி நிறுவனம்**
2002
**சனி, ஞாயிறு**
**கணக்கீடு**
திரு.பாலவாசன் 7-8மணி
**பொருளியல்**
திரு.விக்கி 11-12மணி
**வர்த்தகம்**
திரு.நந்திஸ் 9-10மணி
**அளவையியல்**
திரு.சயந்தன் 8-9மணி
(72865)

**DCS Jaffna**
**SCHOLARSHIP SCHEME - 2000/2001**
The closing date for applications for the Scholarship Scheme 2000/2001 has been extended from 20th January 2000 to 30th January 2000.
P.O.Box 144 Jaffna.
Telephone: 021-2604
(72895)
**Director (Ad),**
**DCS,**
124/2, Palaly Road,
Thirunelvely.

**றோயல் அக்கடமி** சாவகச்சேரி
A/L 2001 **பொருளியல்** S. **வரதராஜன்**
* சந்தைப் பொருளாதாரம் * தேசிய வருமானம்
**ஆரம்பம்:- 21-01-2000 வெள்ளி 4.00மணி**
A/L 99 DAY CLASS **மீட்டல் வினாவிடை வகுப்பு**
**ஆரம்பம்:- 21-01-2000 வெள்ளி 12.00மணி**
* A/L 99 DAY, 2000 1வது **பொருளியல் பரீட்சை** 30-01-2000
* அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(72858) - **நிர்வாகி** -

நினைவூட்டுகிறோம்.....
உளநலத்துறையும்
மருத்துவ மாணவர் ஒன்றியமும்
இணைந்து வழங்கும்
குழந்தை
ம.சண்முகலிங்கத்தின





வேள்வித் தீ
(நாடகம்)
கைலாசபதி
கலையரங்கில
23.01.2000
ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 10.30
பி.ப. 3.30
**M.S.U**

**சிவநெறி கல்வி நிலையம்**
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)
**புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை12 இல் முதல் ஐந்து இடங்களைப் பெற்றோர்**
K. பாலமுரளி - S.J.C
T. சஜந்திகா - C.G.C
T. கஜன் - S.J.C
V. மிதூரன் - S.Be.S
S. கஜானன் - S.J.C
**16வது பரீட்சை :- 23-01-2000 பி.ப. 2மணி**
குறிப்பு:- இம்முறையும் எம்மால் தயாரிக்கப்பட்ட அதிவிசேட 50 பரீட்சைகளை நடத்தத்திட்டமிட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
**(பரீட்சை ஒவ்வொரு ஞாயிறு பி.ப 2 மணி)**
(C/10683) - *நிர்வாகி* -

**IBMS**
Center for Computer Training
701,K.K.S Road, Jaffna.
New Classes....
Ms Word 2000
Ms Excel 2000
Ms Access 2000
Page Maker 6.5
Visual Basic 6.0
Above Classes Commence on 23/01 2000
**Module Examination:**
Ms Word
Date: 23/01/2000
Time: 10.00am
(72899)

**எமது வீடியோ C.D வெளியீடு**
பிரபு, கரன்
ரோஜா, விந்தியா
நடித்த
* திருநெல்வேலி
*ரம்பா ஊர்வசி - மேனகா
ஆர்க் வீடியோ லைபிரரி,
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/10736)

எமதுஇன்றைய வீடியோ C.D வெளியீடுகள
பிரபுவின்
*திருநெல்வேலி
விஜயகாந்தின்
*வானத்தைபோல
வீடியோவிமல்,
யாழ்ப்பாணம்.
(C/10735)

**வீடியோ C.D வெளியீடுகள்**
பாலகிருஷ்ணன்,சிம்ரன்
நடித்த
* சண்முக பாண்டியன்
பிரபு, கரன்
நடித்த
* திருநெல்வேலி
(C.D)
அடுத்த வெளியீடு
விஜய், சாலினி
நடித்த
கண்ணுக்குள் நிலவு
திரை அரங்குகளுக்கும் வழங்கப்படும்.
**விஷ்ணுவீடியோ,**
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(C/10737)

**பெற்றோர்களே!**
Are you worried about your Children spending much time viewing TV ?
If You Say, " YES "
The Best Solution is.........
REPLACE YOUR TV by a COMPUTER
Before that Send them to us
We the IBMS Lead them along the right way
First time in Jaffna We provide special computer program for children
Take the right way
Make the right move
**Further details contact.....**
(72900)
**IBMS**
No.701, K.K.S Road,
Jaffna.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.